உ





# ஞானச்சுடர்

ஐப்பசி மலர்




1998

வெளியீடு

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறள் வழி

" முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும் ".

பொருள்:
உள்ளத்தில் தீய எண்ணத்துடன் சிரித்துப் பழகும் வஞ்சகரிடம் அஞ்ச வேண்டும்.

ஸ்ரீ
அருணாசலசிவ அக்ஷர மணமாலை

நூல்
அருணாசலசிவ அருணாசலசிவ
அருணாசலசிவ அருணாசலசிவ !

36) சொல்லாது சொலிநீ சொலற நில்லென்று
சும்மா விருந்தா யருணாசலா (அ)

37) சோம்பியாய்ச் சும்மா சுகமுண் டுறங்கிடிற்
சொல்வே றென்கதி யருணாசலா (அ)

38) சௌரியங் காட்டினை சழக்கற்றதென்றே
சலியா திருந்தா யருணாசலா (அ)

39) ஞமலியிற் கேடா நானென் னுறுதியா
னாடிநின் னுறுவே னருணாசலா (அ)

40) ஞானமில் லாதுன் னாசையாற் றளர்வற
ஞானந் தெரித்தரு ளருணாசலா (அ)

[தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 10

1998 ஐப்பசி

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1) | தவயோகியின் தமிழ் மந்திரம் | 1 - 3 |
| 2) | புகழ் | 4 - 6 |
| 3) | கண்ணனும் கர்ணனும் | 7 - 9 |
| 4) | உண்மைவழி நின்ற சித்தர்கள் | 10 - 11 |
| 5) | விபூதியின் தனிச் சிறப்பு | 12 - 13 |
| 6) | தமிழ்க் கடவுள் முருகன் | 14 - 16 |
| 7) | மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் | 17 - 20 |
| 8) | மனிதன் - ஒரு மதிப்பீடு | 21 - 22 |
| 9) | சந்நிதியானின் அருட்கடாட்சம் | 23 - 25 |
| 10) | சூரிய பகவானிடமிருந்து சக்தி பெறுவோம் | - 26 |
| | மாணவர் பக்கம் | |
| 11) | தமிழ் நாவல் இலக்கியம் | 27 - 28 |
| 12) | விஞ்ஞான விளக்கம் | - 29 |
| 13) | Easy Way to Learn English (Part—10) | 30 - 32 |

அன்பளிப்பு : மலர் ஒன்று 25/- ரூபா

வருட சந்தா தபால் செலவுடன் 325/- ரூபா.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐப்பசி மாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

திரு. சி. தங்கவடிவேலு
( சிற்றிபேக்கரி உரிமையாளர், தும்பளை )

வைத்திய கலாநிதி V. குகமூர்த்தி
( நாவலர் வீதி, யாழ்ப்பாணம் )

நிறுவனர் ரலன்ற் கல்வி நிறுவனம்
( கரவெட்டி )

திரு. A. S. S. இராமச்சந்திரன்
( மாலிசந்தி, அல்வாய் )

திரு. ச. தாமோதரம்பிள்ளை
( பழமுதிர்சோலை, கரணவாய் தெற்கு )

திரு. சு. நல்லதம்பி
( பிரதான வீதி, தொண்டைமானாறு )

உரிமையாளர் ரஜனி பீடா ஸ்ரோஸ்
( உடுப்பிட்டி )

உரிமையாளர் "விஜிதா அரிசி ஆலை"
( வல்லை வீதி, அச்சுவேலி )

திரு. செ. நடராசா
( உப தபாலதிபர், வளலாய் )

திரு. மு. விஜயரத்தினம்
( காட்டுப்புலம், தொண்டைமானாறு )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானச்சுடர் - புரட்டாதி மாத வெளியீடு

**வெளியீட்டுரை :-**

புரட்டாதி மாத மலருக்கான வெளியீட்டுரையை ஆசிரியர் திரு. கி. இராமகிருஷ்ணன் அவர்கள் நிகழ்த்தினார்கள். நூல் வெளியீட்டில் உள்ள பல்வேறு வகையான பிரச்சனைகளையும், சிக்கல்களையும் குறிப்பிட்டு அவற்றை எல்லாம் தாண்டி இந்த நூல் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

**ஆய்வுரை :-**

இந்த மலருக்கான ஆய்வுரையை எழுத்தாளரும் ஆசிரியருமான திரு. தெணியான் அவர்கள் நிகழ்த்தினார்கள். பழுத்த எழுத்தாளராக விளங்குகின்ற திரு. தெணியான் அவர்கள் இறை அன்பர்கள் மத்தியில் தான் பேசுவது மிகவும் அபூர்வமானது என்றும் இருந்தாலும் செல்வச் சந்நிதி முருகன் தொடர்பான அன்பர்கள் மத்தியிலும் ஞானச்சுடர் நூல்தொடர்பாகவும் பேசுவது தனக்கு மகிழ்ச்சியை அளிப்பதாகக் குறிப்பிட்டார்கள். சந்நிதி என்பது இறைவன் வாழுகின்ற இடம். செல்வச் சந்நிதி என்று கூறும் பொழுது இறைவன் நிறைந்திருக்கும் இடம் என்பது பொருளாகும். அதற்கிணங்கவே செல்வச்சந்நிதியில் இறைவனுடைய நிறைவான அருள் அடியார்களுக்கு கிடைத்து வருகிறது என்று குறிப்பிட்டார்.

நாங்கள் சைவர்களாக இருந்தால் மட்டும் போதாது சைவத்தைப் பற்றிய அறிவும் தெளிவும் கட்டாயம் எமக்குத் தேவை. அதை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு வளர்ப்பதற்கு ஞானச்சுடர் சிறந்த சேவையை ஆற்றிக்கொண்டிருக்கிறது.

மேலும் அடிநிலை பக்தர்களை கட்டியெழுப்புகின்ற வகையில் வாழ்க்கையின் உண்மைநிலை கதைகளினூடாக ஞானச்சுடர் வெளியிட்டுக் கொண்டிருப்பதும் நாம் கவனிக்க வேண்டிய விடயமாகும் என்றும் குறிப்பிட்டார். அத்துடன் புரட்டாதி மாத மலரில் வெளிவந்த கட்டுரைகள் பற்றிய தன்னுடைய மதிப்பீடுகளையும் சுருக்கமாகக் குறிப்பிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஞானச்சுடரே!"
# இனிதாய் வந்திடு

ஆற்றங் கரையாய் ஆலயம் மீதினில்
அறிவுச் சுடராய் மிளிரும் ஞானச்சுடரே
காலத்தின் தேவையே கருத்தாய் கொண்டு
சைவம் தழைக்கவும் தமிழோசை ஓங்கவும்
என்றும் நீ மாதாந்தம் வந்திடுவாய்!

பூமியில் வாழும் உயிரினம் தழைக்கவும்
மக்கள் வாழ்வு இனிதாய் மேவவும்
கற்றோர் மத்தியில் ஞானம் சிறக்கவும்
வழமிகு சந்நிதி ஏற்க ஞானச்சுடரே தினம்வா!

கற்றவர் புகழ் வானவில் ஓங்கிட நாளும்
மாணவர் தேடல் தினமும் தளைத்திட
பண்பாட்டுக் கோலங்கள் என்றும் வளம்பெற
இனிதரு விருட்சமாய் ஞானச்சுடரே வந்திடுவாய்!

நாளை வருகின்ற சந்ததி இதமாய்வாழ
இன்றைய இன்னல்களை எழுத்துருவில் களைந்து
தமிழர்நாம் தலைநிமிர்ந்துவாழ சைவம் தழைக்க
உறுதியாய் வந்திடு ஞானச்சுடரே!

வற்சலா
(தெல்லிப்பழை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்செய்தி!

ஞானச்சுடரை வெளியிடுவதற்கு மட்டும் பயன்பட்டு வந்த சந்நிதியான் ஆச்சிரம அச்சகம் தற்பொழுது தன்னுடைய ஆற்றலை அதிகரித்து பலவகையான அச்சுப் பதிப்பு வேலைகளையும் செய்யக்கூடிய வகையில் தன்னை விரிவுபடுத்தியுள்ளது. ஆகவே அச்சுப் பதிப்பு வேலைகளைச் செய்ய விரும்புகின்ற அன்பர்கள் சந்நிதியான் ஆச்சிரம அச்சகத்துடன் தொடர்பு கொண்டு குறித்த நேரத்தில், தரமான முறையில் தங்களது பதிப்பக வேலைகளைப் பூர்த்தி செய்து நன்மை அடையலாம் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். எம்முடன் தொடர்பு கொண்டால் நேரடியாக வருகைதந்து தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தங்களது தொடர்பு உங்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் எங்களது ஆத்மிகப் பணிகளது வளர்ச்சிக்கும் தூண்டு கோலாக அமையும் என்பதையும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

-சந்நிதியான் ஆச்சிரமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ ஞானபண்டித கலாவித்தகி ★

வருடா வருடம் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் வழங்கப்படுகின்ற விருது 1998 ஆம் ஆண்டு செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு வழங்கப்பட்டது. ஞானபண்டித கலாவித்தகி என்ற விருது வைகாசி மாதம் நடைபெற்ற வைகாசிப் பெருவிழாவின் பொழுது எமது பேரவையால் அன்னாருக்கு வழங்கப்பட்டது. அப்பொழுது பல்கலைக்கழகங்களும் இது போன்ற விருதுகளை அம்மையாருக்கு வழங்கி அவரை கௌரவிக்க வேண்டுமென்ற கருத்துக்களை பல பெரியோர்கள் முன் வைத்ததும் மனம் கொள்ளத்தக்கது. சந்நிதியானின் கருணையினால் இக்கருத்துக்கள் செயலுருவம் பெற்று, யாழ் பல்கலைக்கழகமும் 1998 ஆம் ஆண்டு தன்னுடைய பட்டமளிப்பு விழாவில் அம்மையாருக்கு கலாநிதிப் பட்டத்தை வழங்கி தன்னுடைய பங்களிப்பையும் செவ்வனே நிறைவேற்றியுள்ளது.

ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தில் கலாநிதிப்பட்டம் பெற்ற அம்மையாரை இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் வாழ்த்துவதுடன் அம்மையாரின் சமூகப்பணிகளும் சமயப்பணிகளும் இந்த மண்ணில் பல்லாண்டுகாலம் மேலும் தொடர வேண்டுமென்று ஆற்றங்கரை முருகனின் திருப்பாதங்களை வேண்டுகின்றோம்.

ச. ஆ. சை. க. ப. பேரவை

தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவயோகியின் தமிழ் மந்திரம்

/தொடர்ச்சி ...

தோத்திரத்திற்குத் திருவாசகம், சாத்திரத்திற்குத் திருமந்திரம் என்பது சான்றோர் வாக்கு ஆகும். திருமந்திரம் வேதப்பொருளும் ஆகமசாரமும் ஒருங்கே சேர்ந்து உருவாக்கப்பட்ட அருமைத் திருநூல் ஆகும். சதாசிவநாயனாரால் வெளியிடப்பட்ட ஆகமங்கள் இருபத்தெட்டில் நந்தியெம்பெருமானுக்குக் கிடைத்தவை ஒன்பது ஆகமங்களே ஆகும். இந்த ஒன்பது ஆகமங்களையும் நந்தியெம்பெருமான் குருகுலத்தில் போதித்து வந்தார். இக்குருகுலத்தில் படித்த சுந்தரநாதனாகிய திருமூலரும் ஒன்பது ஆகமங்களின் சாரத்தையே ஒன்பது தந்திரங்களாக வகுத்துக் கூறினார். திருமந்திரத்தின் செய்யுள்களில் கடவுள் வாழ்த்து, வேதாகமச் சிறப்பு, திருமூலர் வரலாறு என்பன கூறப்பட்டுள்ளன. முதலாம் தந்திரத்தில் உபதேசம், யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை, கொல்லாமை, கல்வி கல்லாமை முதலியன கூறப்பட்டுள்ளன. இரண்டாம் தந்திரத்தில் அட்டவீரட்டம், இலிங்கபுராணம், பஞ்சகிருத்தியம், கர்ப்பக் கிரியை, சிவநிந்தை, குருநிந்தை முதலியன கூறப்பட்டுள்ளன. மூன்றாம் தந்திரத்தில் அட்டாங்கயோகம், அட்டமாசித்தி முதலியன கூறப்பட்டுள்ளன.

நான்காம் தந்திரத்தில் திருவம்பலச் சக்கரம், நவகுண்டம், வயிரவ மந்திரம் முதலியனவும், ஐந்தாம் தந்திரத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம், என்பனவும் சத்திநிபாதம் முதலியனவும் ஆறாம் தந்திரத்தில் குருதரிசனம், திருநீறு, துறவு, தவவேடம், ஞானவேடம், முதலியனவும், விரிவாக விளக்கப்பட்டுள்ளன. ஏழாம் தந்திரத்தில் ஆறாதாரம், சிவ பூசை, குருபூசை, சமாதிக்கிரியை, பசு இலக்கணம் முதலியனவும் எட்டாம் தந்திரத்தில் அவத்தைகள், வாய்மை, அவா அறுத்தல் பக்தி முதலியனவும், ஒன்பதாம் தந்திரத்தில் பஞ்சாட்சரம், சிவதரிசனம், சூனியசம்பாஷணை தோத்திரம் முதலியனவும் கூறப்பட்டுள்ளன.

திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் ஞான நிஷ்டையில் இருந்து வருடத்திற்கொரு பாசுரமாக மூவாயிரம் பாசுரங்கள் அடங்கிய திருமந்திரத்தை அருளிச் செய்தார் என்று கூறப்படுகிறது. சாதாரண மக்கள் பொருளுணர்ந்தோ உணராமலோ பல்லாயிரக்கணக்கில் சொற்களைப் பேசுவார்கள். ஆனால் ஞானவான்களோ பல காலும் ஞான நிஷ்டையில் இருந்து எதைச் சொல்ல வேண்டுமோ, எவ்வாறு சொல்ல வேண்டுமோ, அதை மட்டுமே கூறுவார்கள். வெளிமுகமாகச் செல்லும் ஆன்மாவை உள்முகப்படுத்தி அங்கே இன்ப ஊற்றைக் காணச் செய்வதே திருமூலர் போன்ற மகான்களின் சிந்தனையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டசராசரமெல்லாம் வியாபித்திருக்கும் பரம்பொருளை இந்தப் பிண்டமாகிய உடம்பிலே ஞானிகள் கண்டார்கள். தவயோகி திருமூலர் மனித உடம்பிற்குள் நிற்கும் மெய்ப்பொருளை நேரிலே கண்டார். தான் அடைந்து அனுபவித்த அந்தப் பேரின்பத்தை உலக மக்கள் அனைவரும் பெறவேண்டும் என்று விரும்பிய திருமூலர்.

யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படும் தானே

எனத் தமிழ் மந்திரத்தில் அருளுகிறார்.

வினைப் போகம் முடியும் வரையும் ஆன்மாவின் பிறவிச்சக்கரம் சுழன்று கொண்டே இருக்கும். எடுத்த பிறப்பில் தவவாழ்வு வாழாத காரணமே பிறவிக்கு வித்தாக அமைந்து வருகிறது. மனிதப் பிறவி இறைவனை வாழ்த்தி வணங்குவதற்குரிய அரிய பிறவி ஆகும். இறைவனைப் பாடிப்பரவி வணங்குவதற்காகவே அரிய இப்பிறவியை இறைவன் நமக்குத் தந்தான் என்பதைப் பின்வரும் திருமந்திரச் செய்யுள் தெளிவாக விளக்குகிறது.

பின்னை நின்று என்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையில் செய்யக்கூடிய அடிப்படை அறங்கள் பல உண்டு. தினந்தோறும் பூசையிலே ஒரு பச்சிலையை எடுத்து அர்ச்சனை செய்வது எளிய காரியமே ஆகும். இந்துசமயி ஒவ்வொருவரும் நாளாந்தம் தனது ஆத்ம ஈடேற்றத்துக்காக ஆத்மார்த்த பூசை செய்ய வேண்டும். எல்லாத் தெய்வங்களும் வீற்றிருக்கும் தெய்வப் பிராணி பசு ஆகும். பசுவுக்கு ஒருபிடி உணவைக் கொடுப்பது சிறந்த தர்மம் ஆகும். பசு ஒரு பூரண யக்ஞப் பிராணி அதிலிருந்து வெளிவரும் அனைத்துப் பொருட்களும் புனிதமானவையாகப் போற்றப்படுகின்றன. உண்ணும் உணவில் ஒருபிடியைத் தர்மத்துக்கு வழங்கு என்பதே அறக் கட்டளை ஆகும். பிடிஅரிசித் திட்டத்தினால் பல அறப்பணிகள் நமது நாட்டிற் செயற்பட்டு வந்தன. மனித விழுமியங்களில் மிக உயர்வானது மற்றவர்களுடன் இனிய வார்த்தைகளைப் பேசுவதே ஆகும். ஆண்டவனை வழிபடுவதும் பிற உயிர்களிடத்திற் கருணை செலுத்துவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய பேசும் மனிதர்கள் பேணவேண்டிய உயர்விழுமியங்களாகும். இந்த அடிப்படை அறங்களை ஒவ்வொரு மனிதனும் செய்ய வேண்டியதன் அவசியத்தை

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே.

எனத் திருமந்திரம் கூறுகிறது

உடம்பைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைத் திருமந்திரம் பல பாடல்களில் எடுத்து விளக்குகிறது. அழிந்து போகின்ற இந்த உடலை உயிர் இருக்கும் வரை ஆரோக்கியத்தோடும் உறுதியோடும் பாதுகாக்க வேண்டிய காரணத்தை உபாயத்தைத் திருமந்திரப் பாடல்கள் தெளிவாக விளக்குகின்றன. உத்தமனாகிய இறைவன் வீற்றிருக்கின்ற உடம்பை அலட்சியம் செய்யக்கூடாது. கோயிலைப் பரிசுத்தமாகப் பாதுகாப்பது போல உடம்பையும் ஆரோக்கியத்தோடு பேணவேண்டும். இறைவன் வீற்றிருக்கும் கோயிலில் போதை வஸ்துக்களையும், புலாலையும் இட்டுச் சுடுகாடு ஆக்கக்கூடாது. இந்த உடம்பினுள் இறைவன் நீக்கமற நிறைந்திருக்கின்றான் என்பதை உணர்ந்த பின்பு இதைத் தெய்வம் வீற்றிருக்கும் ஆலயமாகப் போற்றுகின்றேன் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே.

செந்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்
( விரிவுரையாளர் - பலாலி ஆசிரியர் கலாசாலை )

காலை மாலை சந்தியா காலமே கடவுள் வணக்கத்திற்கு ஏற்றது. அப்போது மனம் பரிசுத்தமாக இருக்கும்.
— அன்னை ஸ்ரீசாரதாதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்

மனித சமுதாயத்தில் புகழை விரும்பாதவர்கள் மிகமிகக் குறைவு. புகழின்மீது எல்லோருக்கும் ஒரு கவர்ச்சி இருக்கிறது.

தன்னை மற்றவர்கள் புகழும் போது அந்தப் புகழுரைகள் எல்லாம் தனக்குப் பொருத்தம்தானா என்று நினைத்துப் பார்ப்பவர்கள் எந்தக் காலத்திலும் மிகமிகச் சிலராகவே இருந்திருக்கிறார்கள்.

மனிதனுக்கு எந்தப் பசி தீர்ந்தாலும் 'புகழ்ப்பசி' தீராது போலிருக்கிறது.

புகழின் வலிமையைப் புரிந்து கொண்ட சிலர் எந்த மனிதரையும் புகழ்ச்சியுரையாலேயே மயக்கிவிடலாம் என்று உறுதியாக நம்புகிறார்கள். புகழ்ச்சியுரை என்பது மிகப் பெரிய போதைப் பொருளாகவே ஆகி விட்டது.

தமிழ்ப் பண்பாட்டில் புகழுக்கு ஒரு தனி வரலாறே இருக்கிறது என்று சொன்னால் தவறில்லை.

சங்க காலத்திலேயே புகழ் வரும் என்று தெரிந்தால் உயிரைக் கூடக் கொடுக்கத் தயாராக இருந்திருக்கிறார்கள். ''புகழெனின் உயிரும் கொடுக்குவர்'' என்ற புறநானூற்றுத் தொடர் இந்தச் செய்தியை நமக்கு விளக்குகிறது.

புகழ் என்றால் என்ன? புகழின் மீது மனிதனுக்கு என்ன அவ்வளவு பெரிய நாட்டம்?

புகழ் என்பது நாம் செய்த காரியங்களின் விளைவாகத் தானே நமக்கு வந்து சேருவது. புகழுக்குரிய காரியங்களைச் செய்யாமல் புகழ் வராது.

புகழுக்குரிய காரியங்கள் என்று நினைக்கத் தகுந்தவை எவை? ஒருவன் தன்னிடம் வந்து கைநீட்டி இரக்கும்போது இல்லை என்று சொல்லாமல் கொடுப்பது மிகப் பெரிய அறமாக நெடுங்காலமாகப் பேசப்பட்டு வருகிறது. இருப்பதை ஒளிக்காமல் இயன்றதைக் கொடுக்கிற வள்ளன்மை தப்பாமல் புகழைக் கொண்டு வந்து சேர்க்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உரைப்பார் உரைப்பவையெல்லாம் இரப்பார்க்கு ஒன்று
ஈவார் மேல் நிற்கும் புகழ்"

என்று வள்ளுவர் சொல்லுவது இங்கே நம் நினைவுக்கு வருகிறது.

ஒருவன் உள்ளத்தில் இயல்பாக அமைந்த ஈவு இரக்கம் எந்த அளவுக்கு அவனைச் செயற்படுத்துகிறதோ அந்த அளவுக்கு அவனுக்குப் புகழ் வந்து சேரும்.

ஈகை வளர வேண்டுமானால் ஒருவனுக்கு முயற்சியும் உழைப்பும் வேண்டும். தன் தேவைகளைக் குறைத்துக் கொள்கிற திறமை வேண்டும். தன்னுடைய தேவைகளையும் ஆசைகளையும் குறைத்துக் கொள்ளத் தெரியாதவன் வள்ளலாக இருக்க முடியாது. தன்னுடைய தேவைகளும் ஆசைகளும் அளவிறந்து பெருகிவிட்டால் 'அவற்றை நிறைவேற்றவே அவனுக்கு ஆயிரம் பேர் உதவவேண்டும்' அந்த நிலையில் அவனால் எப்படிப் பிறருக்கு உதவ முடியும்?

ஆசைகளையும் தேவைகளையும் குறைத்துக் கொண்டால் கூட இல்லாதவர்க்கும் இயலாதவருக்கும் வழங்கவேண்டும் என்ற மனநெகிழ்ச்சி இருந்தால் தான் வழங்க முடியும். இல்லையென்றால் எவ்வளவு பொருளிருந்தாலும் அவனால் வழங்கவும் முடியாது; வள்ளலாக மாறவும் முடியாது.

இல்லாதவருக்கும் இயலாதவருக்கும் இயல்பாகவே கொடுப்பது என்பது புகழுக்குரிய ஒரு செயல். இந்தச் செயலைப் பாராட்டிப் பேசாத இலக்கியமில்லை. புகழுக்குரிய காரியம் என்பது ஈகை ஒன்றுதானா? இன்னும் உண்டு.

நமக்குத் தீமை செய்த ஒருவனுக்கு நாமும் தீமை செய்து நம்முடைய வலிமையைக் காட்ட வேண்டும் என்று மனத்தில் ஒரு வேகம் எழுவது இயல்புதான். சூழ்ச்சிக்குச் சூழ்ச்சி தீமைக்குத் தீமை-கொலைக்குக் கொலை என்று இப்படியே போய்க் கொண்டிருந்தால் தீமைக்கு முற்றுப் புள்ளி இடுவது எப்போது? தீமைகள் ஒடுக்கப்படுவது எப்போது? தீயவர்களைக் கொலை செய்வதால் தீமைகள் ஒழிந்து விடா.

தனி மனித விரோதங்கள் சமுதாய அமைதியைக் குலைத்து விடும். தனிமனித விரோதங்களுக்கு இடமில்லாமல் தீமைகளைக் கட்டுப் படுத்தத்தான் அரசு, காவல்துறை, நீதிமன்றம் என்றெல்லாம் அமைப்புக்கள் உருவாகியிருக்கின்றன. தீயவர்களுக்கு இந்த அமைப்புக்கள் தண்டனை வழங்கித் தீமைகளைக் கட்டுப்படுத்துகின்றன. இந்த அமைப்புக்களில் பொறுப்பில் இருப்பவர்கள் கூடத் தனிமனித விரோதங்களுக்கு இடம் தரக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி மனித விரோதம் வளர்ந்து விட்டால் எதிரியைப் பழிவாங்க வேண்டும் என்ற வேகம் பிறக்கும் வஞ்சம் தீர்க்கும்வரை ஓய்வு இருக்காது, உறக்கம் இருக்காது.

வஞ்சம் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் மாறி மாறி வளர்ந்து கொண்டே இருந்தால் அதற்கு ஒரு முடிவே இருக்காது. அதற்கு முற்றுப் புள்ளி வைக்க ஒரே வழி - தனி மனித விரோதத்துக்கு இடம் தராமல் பிறர் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்வதுதான். அப்படிப் பொறுத்துக் கொள்வது எளிதல்ல. ஆனால் அப்படிப் பொறுத்துக் கொள்ளத் தெரிந்தவர்க்குப் புகழ் தானாக வந்து சேர்கிறது. பழி வாங்கு பவனுக்குக் கணநேரம் மகிழ்ச்சி ஏற்படலாம். அந்த மகிழ்ச்சி மின்னல் போலத் தோன்றி மறைந்துவிடும். ஆனால், பொறுத்துக் கொண்டவருக்கு அது புகழுக்கு உரிய செயலாக ஆகிவிடுகிறது. அந்தப் புகழ் மின்னல் போல மறைவதில்லை, அவருடைய இறுதி மூச்சுவரை அந்தப் புகழால் வரும் அமைதியும் இன்பமும் அவரோடு நிலைத்து நிற்கின்றன. புகழுக்கு உரிய செயல்களில் இதுவும் மிக இன்றியமையாத ஒன்று.

தன்னால் பிறருக்கு நலம் விளைய வேண்டும்; எந்த வகையிலும் தீங்கு விளையக் கூடாது என்ற உணர்வோடு ஒருவன் செயற்படும்போது புகழ் அவனை வந்து சேர்கிறது; நிலைத்து அவனோடு நிற்கிறது.

> ''ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
> பொன்றுந் துணையும் புகழ்''

என்று வள்ளுவர் சொல்லுவதை நினைத்துப் பாருங்கள்.

தொகுப்பு: சந்நிதியான் ஆச்சிரமம்

நன்மை தீமைகளைப் பாகுபடுத்திப் பார்க்கும் திறமையுடைய ஒருவன் தான் என்ற அகந்தையை விட்டொழிக்க முடியும் இதுவும் கடவுளுடைய கருணை ஒன்றினால்தான் முடியும். இந்தக் கருணையை அடையப் பெற்றவன் சமூகம் சம்பந்தமான மற்றும் ஆன்மிக சம்பந்தமான அகம்பாவத்தை ஒழிக்க முடியும்.

— ஸ்ரீ நாராயண குரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணனும் கர்ணனும்

மகாபாரதப் போரில் பதினேழாம் நாள். போர் நடந்து முடிந்து விட்டிருந்தது. மகாசேனாபதியான கர்ணனும் போர்க்களத்தில் வீழ்ந்துவிட்டான். கர்ணனின் முடிவைக் குறித்துப் பாண்டவர்களின் பாசறையில் வெற்றிக் கொண்டாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இத்தகைய உல்லாச வேளையில் பாண்டவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக விளங்கிய கண்ணன் மிகவும் கவலையுடன் உட்கார்ந்திருந்தார். அவருடைய வாய் அடிக்கடி, ''இன்று இந்த மண்ணுலகினின்றும் தலை சிறந்த கொடையாளி மறைந்துவிட்டான்'' என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

தர்மபுத்திரரான யுதிஷ்டிரருக்கு எவரைப் புகழ்ந்தாலும் சரி, எவருடைய நல்ல குணங்களை எவ்வளவு தான் போற்றிப் புகழ்ந்தாலும் சரி, பொறாமை ஏற்பட்டதில்லை. ஆனால், தனஞ்சயனுக்குத் தன் தலையாய எதிரியான கர்ணனைக் கண்ணன் புகழ்வதைக் கேட்க மிகவும் மனவருத்தம் ஏற்பட்டது. எனவே, அவன் முகத்தைத் தொங்க விட்டபடி அமர்ந்திருந்தான்.

அர்ஜுனனின் நிலைமையைக் கண்ட கண்ணன் அவனிடம் ''அர்ஜுனா உன்னைப் பார்த்தால் நான் கர்ணனை அளவுமீறிப் புகழ்வதாய் நீ நினைப்பது போலத் தோன்றுகின்றது. ஒரு காரியம் செய். நீ இப்போது என்னுடன் வா. தொலைவில் நின்று கொண்டு நடப்பதைக் கவனி. கொடையாளியான கர்ணன் இன்னும் இறந்து போகவில்லை. அவனுடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. இப்போது இந்த நிலையிற்கூட அவனுடைய கொடைத் தன்மையைக் காணலாம்'' என்றார்.

இரவு ஆகிவிட்டிருந்தது. யுத்த பூமியில் பிணம் தின்னும் நரிகளின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. இங்கும் அங்குமாகச் சிலர் வேதனையுடன் முனகிக் கொண்டிருந்தார்கள். போர்க் கருவிகளின் உடைந்த பாகங்கள், அம்புக் குன்றுகள், பிணக் குவியல்கள், இரத்தத்தால் சேறான தரை ஆகியவற்றினால் அந்த இடம் மிகவும் பயங்கரமாகக் காணப்பட்டது. அர்ஜுனனைச் சிறிது தூரத்தில் நிற்கச் சொல்லிவிட்டு கண்ணன் தான் மட்டும் அந்தணரைப் போல் வேடமிட்டுக் கொண்டு உரத்த குரலில், ''கர்ணா! கொடையாளி கர்ணா! நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?'' என்று கத்திக் கொண்டே நடந்தார். தரையில் மூர்ச்சையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்த கர்ணன் தலையைத் தூக்கி " என்னை அழைப்பது யார்? சகோதரா! தாங்கள் எங்கே இருக்கின்றீர்கள்?" என்று கேட்டான்.

அந்தணர் கர்ணனின் அருகில் வந்துவிட்டார். அவர் கர்ணனிடம், "நான் மிகவும் நம்பிக்கையோடு உங்களை நாடி வந்திருக்கின்றேன். எனக்குச் சிறிதளவு தங்கம் வேண்டும். மிகவும் சிறிதளவு கொடுத்தாற் கூடப் போதும்!" என்றார்.

கர்ணனும் அவரிடம், "ஐயா! தாங்கள் என் வீட்டிற்குச் செல்லுங்கள். என் மனைவி தங்களுக்கு வேண்டிய அளவிற்குப் பொன்னும், பொருளும் கொடுப்பாள்" என்றான். சாதாரண அந்தணராக இருந்திருந்தால், கர்ணன் கூறியபடியே அவனது வீட்டிற்குச் சென்றிருப்பார். வந்திருப்பவர் யார்? எனவே, அவர் கர்ணனிடம் கோபத்தைக் காட்டும் வகையில், "கொடுக்க விருப்பமில்லையென்றால் இல்லையென்று சொல்லி விடுவதுதானே! இங்கும் அங்கும் ஏன் என்னை ஓடச் சொல்கிறாய்! நான் எங்கும் போகமாட்டேன். எனக்கு இரண்டு கடுகளவு தங்கம் கிடைத்தாற் போதும்! இதற்காக நான் எங்கும் போகமாட்டேன்! என்றார்.

கர்ணன் சிறிது நேரம் யோசித்தான். பிறகு அந்தணரிடம், "ஐயா! என் பற்களில் கொஞ்சம் தங்கம் வைக்கப்பட்டிருக்கிறது. தாங்கள் தயவு செய்து அதை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

அதைக் கேட்டதுமே அந்தணரின் முகம் வெறுப்பால் சுருங்கியது. அவர், " ஒரு பிராமணனிடம் போய் ஒரு மனிதரின் பல்லைப் பிடுங்கிக்கொள் என்று சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை?" என்று கோபத்துடன் கேட்டார்.

கர்ணன் என்ன செய்வான். இங்குமங்கும் பார்த்தான். அருகில் ஒரு சிறுகல் காணப்பட்டது. எப்படியோ மிகவும் கஷ்டப்பட்டு அந்தக் கல் இருக்கும் இடம் வரை தன் உடலை இழுத்துக் கொண்டு சென்றான் கல்லின் மீது பல்லை வைத்து இடித்தான். பற்கள் உடைந்து விட்டன. அவற்றைக் கையில் எடுத்துக் கொண்டு அந்தணரைப் பார்த்து, "சுவாமி இப்போது எடுத்துக் கொள்ளுங்கள்" என்றான்.

அதைப் பார்த்த அந்தணர், " சீ சீ! இரத்தத்தில் தோய்ந்த புனிதமற்ற எலும்பு!" என்று கூறியபடி இரண்டடி பின் வாங்கினார். கர்ணன் மிகவும் கஷ்டப்பட்டுக் கத்தியால் தங்கத்தை மட்டும் பற்களிலிருந்து சுரண்டி எடுத்தான். எப்படியும் அதை ஏற்றுக் கொள்ள அந்தணர் மறுத்துவிட்டார். கர்ணன் அவரிடம் வில்லை எடுத்துக் கொடுக்குமாறு கேட்டான், அதற்கும் அவர் முடியாது என்று சொல்லிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடியும் கர்ணன் தரையில் தன் உடலை இழுத்தபடி வில் இருக்கும் இடத்திற்குச் சென்றான். மிகவும் கஷ்டப்பட்டு அவன் தன் தலையால் அழுத்தி வில்லில் பாணத்தை வைத்து வருணாஸ்திரத்தை விட்டான். உடனே, அதிலிருந்து உண்டான மழையால் கர்ணனின் கையில் இருந்த பற்களில் இரத்தம் நீங்கித் தங்கம் சுத்தமாகக் கழுவப்பட்டு விட்டது. இப்பொழுது கர்ணன் மிகவும் சிரத்தையோடு அதை அந்தணரிடம் நீட்டி, ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினான்.

மறுவிநாடியே, ''வேண்டிய வரத்தைக் கேள், கர்ணா!'' என்று கேட்டபடி அந்தணர் வேடத்தில் வந்த கண்ணன் வெளிப்பட்டுக் கர்ணனுக்குக் காட்சி கொடுத்தார். அர்ஜுனனுக்கு மிகவும் வெட்கமாய்ப் போய்விட்டது. அந்த இடத்திலேயே நின்றுவிட்டான். கர்ணன் இவ்வாறுதான் கூறினான், ''மூவுலகிற்கும் அதிபதியான தாங்கள் என் உயிர் பிரியும் இந்த வேளையில் இங்கு வந்திருக்கும் போது நான் என்ன வரத்தை எதற்காகக் கேட்க வேண்டும்!''

உடனே கர்ணனின் உயிர் கண்ணனின் திருவடிகளில் தலையை வைத்தபடி பிரிந்து விட்டது.

கொடையாளியான கர்ணன் பக்தியிலும் சளைத்தவன் அல்லன் என்பது எவ்வளவு தெளிவாகிவிட்டது.

— ஆன்மீகக் கதைகள்

இன்று கோவில்கள், பாடசாலைகள் எல்லாம் எல்லோருக்கும் திறந்து விடப்பட்டுள்ளன ஆனாலும், மதமாற்றம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். சைவசமயத்தவர்கள் தான் இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். உண்மையான, தூய்மையான நிறுவனங்கள் எமது சமயத்தில் தோன்றுகின்ற அதே நேரம் எமது சமயத்தவர்களும் விழிப்புடனும் விசுவாசத்துடனும் வாழ்வதில் கவனம் செலுத்தவேண்டும்.

ஆடியபாத நாவலர் வெளியீட்டில்
ஆறு. திருமுருகன் ஆற்றிய உரையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை வழிநின்ற சித்தர்கள்

காரைச்சித்தர் பாடல்களின் பிற்பகுதியில் அவர் விஞ்ஞானிகளுக்கு தனது பேரறிவின் முதிர்ச்சியால் கண்ட உண்மை நிலையை மிகத்தெளிவாக அறிதியிட்டுக்கூறி விளங்க வைக்கும் முறையை சிந்தனைக்கு எடுக்கும் போது இந்த பரமஞானியாகிய சித்தர் கலியுகம் தொடங்கி ஆயிரம் வருடங்களில் வருங்கால விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பில் ஏற்படப் போகும் விளைவுகள் நாட்டுக்கும் இயற்கைக்கும் மக்களுக்கும் என்னென்ன தீமைகளை ஏற்படுத்தி அழிவுப் பாதைக்கு வழிதிறந்து விடப்போகிறது என்ற ஒருவித விசனத்துடனும் ஏக்கத்துடனும் வருங்காலத்தில் பிறக்கப்போகும் விஞ்ஞானிகளுக்கு உங்களின் விஞ்ஞான அறிவைப் பழிக்கவில்லை ஆனால் விஞ்ஞானத்திற்கு மேலான மெஞ்ஞான அறிவைத்தேடி அதன் கட்டுப்பாட்டுக்குள் நின்று விஞ்ஞான அறிவைத்தேடி உன் கண்டுபிடிப்பை அழிவுப்பாதை வழி செல்லாமல் மெஞ்ஞான வழிநின்று உண்மைக்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கு உலகம் உய்யவும் வழியேற்படித்தி. என்றும் அழியாப்புகழ் அடைவாய். என்ற கருத்துப்பட புத்திமதி கூறியுள்ளார்.

## காரைச் சித்தர் பாடல்

அடடாடா விஞ்ஞானி யறையக் கேளாய்
யாவைக்கும் காரணத்தை அறிவாயோ நீ,
அடடாடா அகிலாண்டக் கவர்ச்சி யேனோ?
அணுவுக்குள் மின்காந்த மமைந்த தேனோ?
கெடடாடா நேர் நிரையான் வின்க ளேனோ?
குவிந் திணைந்து பிரிந்த ரஸா யனமு மேனோ?
விடடாடா யிவை யெல்லா மென்னே யென்னே!
விளக் கிடுவாய்க் களக்கமறச் சொன்னேன் சொன்னேன்!

வெத்துலக விதியெல்லாம் வெப்பம் தட்பம்
விஞ்ஞான விதியெல்லாம் சேர்ப்பும் கூர்ப்பும்
செத்துலக விதியெல்லாம் யாதம் கூதம்
சீவனுடல் விதியெல்லாம் காமம் கோபம்
சத்துலக விதியெல்லாம் சகஜம் சாந்தம்
தான் தானாத் தன்தமயமாத் தழைவே தாந்த
சித்துல விதிசக்தி னோடு சித்தாய்ச்
சேரனந்தத் தானந்தச் சீராம் வேராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேரறியா வினைவறியும் விஞ்ஞானந்தான்
வேரறிந்தே வினையாறும் மெய்ஞ்ஞானந்தான்
சார்பறியுஞ் சாலறியும் விஞ்ஞானந்தான்
சார்புதருஞ் சாரமதே மெய்ஞ்ஞானந்தான்
ஈரறியு சீர்மை யெலாம் விஞ்ஞானந்தான்
இருமை யெலா மொருமையுறல் மெய்ஞ்ஞானந்தான்
பாரறியும் பேதநெறி விஞ்ஞானந்தான்
பாரறியும் போகநெறி மெய்ஞ்ஞானந்தான்.

காமத்தை விட்டிடடா கலகத்தை வெட்டிடடா
கருநோக்கிக் கலாத்தில் காவிலியைக்கட்டிடடா
உணைக்கும் அந்தையடா உலகோர்க்கு நந்தையடா
உரையெல்லாம் பித்தையடா உளக்கவிசே வித்தையடா
காமத்தைக் கண்டிடடா கர்மத்தை வென்றிடடா
சகலத்தை யந்தமும் சத்தியத்தில் நின்றிடடா
வாமத்தி யருளாலே வாழ்த்திலே வெற்றி
மண்ணெல்லாம் பொன்னாகும் பார்க்கத்தலைக் கண்டிடடா.

" சிவம் "

## இறைவனைக் காணோம் !

ஆணவமும், பெருமையும் உங்களிடம் வளர்ந்து விட்டால் அதன் பின் ஆசைகள் தோன்றிவிடும்; விரைவில் பற்றுக்களும் தோன்றி விடும்; பற்றிலிருந்து அனைத்து விதமான பந்தங்களும் வளர்ந்து விடும். பந்தங்கள் அதிகரிக்கும் போது கடவுள்பக்கம் திரும்ப முடியாத அளவிற்கு, அவரைப் பார்க்க முடியாத அளவுக்கு உங்கள் கண்ணும் சிதறிவிடும். நீங்கள் இறைவன் பக்கம் திரும்பும் போது தான் உங்களால் இறைவனைப் பார்க்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபூதியின் தனிச் சிறப்பு

உலகில் உள்ள மிருகங்களின் மலம் சாதாரணமாக எந்தத் தேவைக்கும் பயன்படுத்துவதில்லை. ஆனால் பசுவின் சாணம் விசேஷ மகிமை பொருந்தியது. மிகச்சிறந்த கிருமி நாசினி ஆகும். இதனை நம் முன்னோர்கள் நன்கு தெரிந்து வைத்துள்ளார்கள். இதனால் கோமயம் வீடுமெழுகுவதற்கு, முற்றத்திற்குச் சாணத்தண்ணீர் தெளித்தல் போன்ற தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றார்கள். அத்தோடு பஞ்சகவ்வியம் பால், தயிர், நெய், கோசலம், கோமயத்தால் ஆனது. கோசலத்தை நீர் கலந்து தோட்டங்களுக்குப் பயன்படுத்தினால் குருமன் போன்ற நோய்களைக் கூடக்கட்டுப்படுத்துகிறது. அதாவது பொலிடோல் போன்ற கிருமி நாசினிகள் செய்கின்ற வேலையைக் கூட கோசலம் செய்கின்றது. பசுவைப் பூவுலக காமதேனு என்று கூறினால் அது மிகையாகாது. அதாவது பால் ஓர் ஊட்டச்சத்து மிக்க பானமாகும். குழந்தைகள்முதல் பெரியோர்வரை பால், தயிர், நெய்யை விரும்பி உண்பார்கள், அது மட்டும் அல்லாமல் எங்கள் சைவக்கிரியைகளில் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன.

இப்படியான சிறந்த தன்மைகள் பொருந்திய கோமயத்தை பூமியில் விழவிடாது ஏந்தி கோசலத்தை விட்டுக் குழைத்து, தட்டி, காய வைத்து கனத்த நாட்களாகிய அமாவாசை, பௌர்ணமி, அட்டமி, நவமி சிவராத்திரி போன்ற தினங்களில் சிவாக்கினியிற் புடம்வைத்தல். இதனை கற்ப விபூதி என்பர். காடுகளிற் கிடைக்கும் பசுச் சாணத்தைச் சேகரித்து மந்திரங்களைக்கூறி, சிவாக்கினியில் புடம் வைத்தல் அநுகற்பவிபூதி எனப்படும்.

மாடுகள் இருக்கும் இடங்களிலுள்ள சாணத்தை காட்டுத்தீயினால் எரித்து மீண்டும் அதனைச் சிவாக்கினியில் எரித்து எடுப்பது உபகற்ப விபூதி எனப்படும். மந்திரமில்லாது எல்லோராலும் சேகரிக்கப்பட்ட சாணத்தைச் சுள்ளிகளினால் எரித்தெடுப்பது அகற்ப விபூதி எனப்படும்.

மேற்கூறிய முறையில் ஏதாவது ஒரு முறையில் தயாரிக்கப்பட்ட விபூதியைப் பாலிற் கழுவிக் காய வைத்தல் வேண்டும். இதனை அரித்து மட்பாண்டத்திற் போட்டு விபூதிப்பச்சை, துளசி, முல்லை, மல்லிகை போன்ற நறுமண மலர்களை விபூதிப் பானையுள்ளே போட்டு வைத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசிவ எனப் பூசும் பொழுது தோஷம் நீங்கி மந்திரமயமாகிறது. இதனால் விபூதியில் உள்ள தோஷம் நீங்குகிறது. தோஷம் நீங்கிய விபூதியைப் பூசினால் சர்வசித்தி கிடைக்கின்றது. இதேமாதிரி விபூதி தற்பொழுது பெற்றுக் கொள்ள முடிவதில்லை. இதனை 'நிவிர்த்தி' செய்யும் நோக்குடன் சாந்தையர்மடம் பிள்ளையார் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகம் இதேமாதிரி ஓர் விபூதியைத் தயாரித்துள்ளது. அதனைப் பெற்றுப் பயன் அடையலாம்.

உலகில் உள்ள மிருகங்களுக்கு இல்லாத சிறப்பு பசுவுக்குண்டு. பசுவில் தேவர்கள் வாசம் செய்கிறார்கள். இதனாலேயே புதியவீடு கோவில் போன்ற இடங்களுக்கு முதலில் பசுவைக் கொண்டு செல்கிறார்கள். உயிர் பிரிகின்ற வேளையிற்கூட பசுதானம் செய்கிறார்கள். இதனால், பசு மிகுந்த சிறப்பை பெறுகின்றது. இப்படியான சிறப்புள்ள பசு அறுகம்புல்லு, குப்பைமேனி, பழம்பாசி, கிழக்காய் நெல்லி, நொச்சி, வில்வயிலை, விஷ்ணுகிராந்தி, சீதேவியார், செங்கழுநீர் போன்ற எத்தனையோ விதமான மூலிகைகளை உண்கின்றது. சமிபாடு அடைந்து போக, மிகுதி பசுவின் சாணமாக வெளிவருகின்றது. இதனைச் சேமித்து விபூதி தயாரிக்கும் பொழுது அந்த விபூதி எத்தனை விதமான மூலிகைகளின் சாம்பலாக இருக்கும். அதனைப் பயன்படுத்தினால் உடலில் நோய்கள் தங்குமா? இதை விட விபூதியில் மந்திரம் படிகின்ற தன்மை அதிகம். அத்துடன் வாசனைத் திரவியங்கள் சேர்க்கப்பட்டு இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட திருநீறு மிகுந்த சிறப்பானது. அதனை அணியும் பொழுதும் சிறிதளவு வாயிற் போட்டு அணிவார்கள்.

திருநீறு கிருமிகளை அழிக்கும் ஆற்றல் வாய்ந்தது. எப்படி நாங்கள் எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் பொழுது எமது இரத்தத்துடன் சிறிது எண்ணெய் கலக்கின்றதோ அதேமாதிரி விபூதி பூசப்படும் பொழுது நமது இரத்தத்துடன் மூலிகைப் பொடியும் கலக்கின்றது. அது உடலில் உள்ள நோய்களைக் குணமாக்குகின்றது. இதனை உணர்ந்துதான் திருநீற்றை மூன்று நேரமும் கட்டாயமாகப் பூசும் வண்ணம் வற்புறுத்துகின்றார்கள். இதனால் உடலில் உள்ள நோய்க் கிருமிகள் அழிகின்றன. இதிலிருந்து நம் முன்னோர்கள் ஒவ்வொரு விடயத்தையும் நன்கு ஆராய்ந்தே வகுத்துள்ளார்கள். இந்து மதத்தத்துவங்கள் வெறும் சடங்குகள் அல்ல அத்தனையும் விஞ்ஞான பூர்வமாக விளக்கமும் அளிக்கக் கூடியவை. எனவே, சாஸ்திர முறைப்படி தயாராகும் விபூதியை அனைவரும் பெற்றுப் பயன் அடைய வேண்டும் என்று எல்லாம் வல்ல விநாயகரை இறைஞ்சுகின்றேன்.

காரை பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கடவுள் முருகன்

முருகப் பெருமான் தமிழருக்கே உரிய கடவுள். செந்தமிழ் நாட்டுக்கே உரிய கடவுள். முருகன் தமிழைக் காத்தான். தமிழை ஓம்பினான். முருகனே தமிழ். தமிழே முருகன். முருகன் இறைமணங் கமழ்கின்றவன். தமிழும் இறைமணங் கமழ்வது. முருகன் என்றும் குன்றா இளமையுடையவன். தமிழும் சீரிளமைத் திறனோடு என்றும் வாழ்கின்றது.

முருகன் செந்தமிழ்க் கடவுள் ஆவார். பண்டு தொட்டு அவன் பைந்தமிழ் நாட்டில் யாண்டும் நீக்கமற நிறைந்து காணப்படுகின்றான். திணை நிலத் தெய்வங்களுள் ஒருவராகக் குறிஞ்சிநிலக் கொற்றவனாக நின்று குமரன் மிகப்பழங் காலத்திலேயே காட்சி வழங்கியிருக்கிறான். குமரக் கடவுள் திணைநிலத் *தெய்வமாக விளங்குவதோடு அன்பர் மனநிறை தெய்வமாகவும் விளங்குகின்றான்.

கன்னிப் பெண்கள் தாம் விரும்பும் கணவரைப் பெற அவனடி போற்றிப் பரவி நின்றனர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய சங்க இலக்கியங்களில் எல்லாம் முருகன் குறிப்பிடப்படுகிறான். பழைமையான நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் முருகனைப் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. '' சேயோன் மேய மைவரை உலகமும் '' என்று குன்றா அழகுடைய குறிஞ்சி நிலக் கடவுளாக அவன் தொல்காப்பியத்தில் பேசப்படுகின்றான். இதனையே '' விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ '' என்று நக்கீரர் திருமுருகாற்றுப் படையிற் குறிப்பிடுகின்றார்.

நக்கீரர் பெருமானைப் பூதம் குகையிற் சிறையிட்ட போது அவர் பாடிய திருமுருகாற்றுப் படையைக் கேட்டு மகிழ்ந்து பூதத்தை அழித்துப் புலவரை சிறை மீட்டுக் காத்தவன் கந்தவேள் இதனை அருணகிரியார்,

'' பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்குமொரு கவிப்புலவன்
இசைக்குருகி வரைக் குகையை இடித்து வழி காணும் ''
வேலையுடைய வேலவன் என்றார்.

மேலும் முருகனைப் பற்றி

'' முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்
செந்தமிழ் நூல் விரித்தோன் ''

என்றெல்லாம் அவர் பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் விரும்பியது தமிழ்ப்பா மாலைகளையே. அவன் தோளுக்கு ஏற்றவை செந்தமிழ் மாலைகளேயாகும். இயல், இசைத் தமிழால் இயற்றப்பட்ட இல் தமிழ்ப் பாமாலைகளை வகைவகையாக அவன் திருப்புயத்தில் ஏந்தியிருக்கிறான் என்று திருப்புகழ் பாடும்.

" இலக்கணங்களும் இயலிசைகளும் மிகவிரிக்கும் அம்பல மதுரித கவிதனை இயற்று செந்தமிழ் விதமொடு புயமிசை புனைவோனே "

முருகன் செந்தமிழை ஆராய்ந்தவன். ஆகவே " முத்தமிழை ஆயும் வரிசைக்காரா " என்று விளிக்கின்றார் அருணகிரியார். முருகனது கை பதுமநிதி; அவன் கொடையில் மேகம். தமிழ்ப் புலவர்களுக்குப் புகலிடம்.

" தடக்கைப் பங்கயம் கொடைக்குக் கொண்டல்
தண்டமிழ்க்குத் தஞ்சம் "

அது மட்டுமா?

" செஞ்சொற் புலவர்க் கன்புற்ற திருச்
செந்திற் குமரப் பெருமானே "

" செஞ்சொற் புலவர்கள் சங்கத் தமிழ் தெரி
செந்திற்பதி நகர் உறைவோனே "

இவையெல்லாம் தமிழ்மீது முருகனுக்குள்ள காதலை விளக்கும் அடிகள்.

தமிழ் மொழிக்கு இருண்டகாலம் ஒன்று இருந்தது. களப்பிரர் ஆட்சியில் தமிழ் நூல்கள் வெளிவரவில்லை. இதனையறிந்த பாண்டியன் கவலையுற்றான். அப்போது ஒரு அகப் பொருள் நூல் " இறையனார் அகப் பொருள் " தமிழ் நாட்டில் தோன்றியது. இதனை இறைவனே இயற்றியதாகக் கூறுவர். இதற்குப் பல சங்கப் புலவர்கள் உரை கண்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தம் உரைதான் சிறந்தது என்று வாதிட்டார்கள். இறுதியில் இறைவனிடம் முறையிட்டார்கள். இறைவன் முருகனை உருத்திர சன்மர் என்ற பெயரோடு ஊமைச் சிறுவனாக அப் புலவர்களிடம் அனுப்பினார். அந்த ஊமைப் பையனின் முன்னிலையில் புலவர்கள் தங்கள் உரைகளை வாசித்தார்கள். புலவர்கள் பலர் வாசித்த போது எவ்வித மாற்றத்தையும் காட்டாத உருத்திரசன்மர், நக்கீரர் உரையைக் கேட்ட போது மெய்சிலிர்த்து, கண்களில் கண்ணீர் சொரிந்தார். இதைக் கண்டு நக்கீரரின் உரையே சிறந்த உரையெனக் கண்டனர். இவ்வாறு தமிழ் உரையின் நல்லுரை எதுவெனத் தீர்ப்பளித்தவர் முருகப் பெருமான். இதனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வாய்ப்புற்றத் தமிழ் மார்க்கத்து உட்பொருள்
வாய்க்குச் சித்திர முருகோனே "

என்று அருணகிரியார் பாடியருளினார்,

முருக வழிபாடு தொல்காப்பியர் காலத்திலிருந்தே தமிழகத்தில் இருந்து வந்திருக்கிறது. முருகன் தமிழ்க் கடவுள் என்பதற்கு அருண கிரியாரின் அருட்பாடல்களே சான்றாக விளங்குகின்றன.

நக்கீரரும் ''அரும் பெறல் மரபிற்பெரும் பெயர் முருகா'' என்றார். இன்னும் நக்கீரர் முருகனை ''நூலறி புலவ'' என்று திருமுருகாற்றுப் படையிற் பாடினார்.

மறத்தை ஒழித்து, அறத்தை நிலை நாட்டி, உலகத்தை உய்வித்தற் பொருட்டு ஆறு முருகனாகத் திரு அவதாரம் செய்த சேந்தனை, கந்தனை செஞ்சுடர் வேல் வேந்தனை, செந்தமிழ் நூல் விரித்தோனை, நாள் தோறும் பாடிப் பரவி அவன் தாள் வணங்குவோமாக.

ந. சிவபாதம் ' புத்தொளி'
(ஆனைக்கோட்டை)

---

## மக்களுக்கான உங்கள் சேவை வெற்றியடைவதற்கு.

பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் புன்னகை உதிர்க்கத் தவறாதீர்கள்.
தகுதியிருந்தாலும் இல்லாவிட்டாலும் பாராட்டுதலைத் தவிர்க்காதீர்கள்.
உண்மையானாலும் பொய்யானாலும் முதலில் நீங்களாக எதையும் வெளியிடாதீர்கள்.
முடிந்தாலும் முடியாவிட்டாலும் உதவமாட்டேன் என்று சொல்லாதீர்கள்.
விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வாய்நிறைய எவரையும் வரவேற்றுவிடுங்கள்.
பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் நன்கு உபசரியுங்கள்.
அரைகுறை நண்பரானாலும் அப்போதுதான் அறிமுகமாக இருந்தாலும்
பண்பாகப் பேசிக்கொள்ளுங்கள்.
குற்றமென்றாலும் குறையென்றாலும் அதைப் பெரிது படுத்தாதீர்கள்.
ஏற்றுக்கொள்ளமுடியாத கருத்தாக இருந்தாலும் எதிர்வாதம் செய்யாதீர்கள்,

தொகுப்பு: க. கனகராசா

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

# ஆதித்தன் புதல்வன்

கண்ண பரமாத்மா தோன்றியமையால் பெருங்கீர்த்தி பெற்று விளங்கியது யாதவ குலம். யாதவ குலத்தில் "சூரன்" என்னும் சிறப்புடை மன்னன் ஒருவன் இருந்தான். கண்ணபிரானின் பாட்டனாகிய இம்மன்னனுக்கு "பிருதை" என்னும் பெண்மகவு ஒன்று இருந்தது. சூரனின் அத்தையின் புதல்வனாகிய "குந்தி போஜன்" என்னும் மன்னனுக்கு புத்திரப் பாக்கியம் கிட்டவில்லை. புத்திரர், இல்லாமையால் குந்திபோஜன் கவலை கொண்டிருந்த வேளை, சூரன், தனக்குப் பிறக்கும் முதல் குழந்தையைக் குந்திபோஜனுக்குத் தருவதாக வாக்களித்திருந்தான். இதன் பிரகாரம், தன் முதல் மகவான பிருதையை குந்திபோஜனுக்கு வளர்ப்பு மகளாகக் கொடுத்துவிட்டான்.

பிருதையைப் பெற்ற குந்திபோஜன், அக்குழந்தைக்கு "குந்தி" எனப் பெயர் சூட்டி மகிழ்வுடன் வளர்த்து வரலானான். குந்தி வளர்ந்து கன்னிப் பருவத்தில் காலடி வைத்தாள். இந்நாட்களில், சிறந்த தவசீலரான, துர்வாசமகரிஷி. குந்திபோஜனின் அரண்மனையை நாடி வந்தருளினார். மகரிஷியின் வருகையால் உளம் உவகை கொண்ட குந்தி போஜமன்னன் முனிவரை மகிழ்வுடன் வரவேற்று. அவருக்கு பூஜைகளைப் புரிந்து இன்பமடைந்தான். தவசீலராகிய துர்வாச மகரிஷியைத் தங்கள் அரண்மனையில் தங்கியிருந்து தங்களை மேன்மைப்படுத்தும்படி மன்னன் வேண்டிக் கொண்டான். மன்னன் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட துர்வாச மகரிஷி நந்தவனத்தில் ஓர் ஆச்சிரமம் அமைத்துத் தம் தவவாழ்வை மேற் கொண்டு மன்னனுடன் தங்கியிருந்தார். சிறந்த தவசீலர்களுக்குச் சேவை செய்வதின் மூலம் மேன்மையடையலாம் என்பதனை அறிந்திருந்த மன்னன் தனது பெண்மகளாகிய குந்தியை துர்வாசமகரிஷிக்குச் சேவைகள் செய்து வருவதன் பொருட்டுக் கட்டளை இட்டான். மனமகிழ்வுடன், உளம் ஒன்றி முனிவர் பெருமானுக்குச் சேவைசெய்து வந்தாள் குந்தி. இவ்வாறு ஓர் ஆண்டு காலம் சென்றது. குந்தியின் சேவை நலத்தால் மன மகிழ்வுற்ற, துர்வாச முனிவர் மந்திரங்கள் சிலவற்றை உபதேசித்தருளினார். மந்திரங்களை மனனம் செய்து, தேவை ஏற்படும் காலங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை உச்சரித்து, அம்மந்திரங்களுக்குரிய தேவதையின் அருளைப் பெறுவதின் மூலம் அத்தேவதைகளின் அம்சமாகச் சிறந்த புதல்வர்கள் உனக்குக் கிடைப்பார்கள் என்று அம்மந்திரங்களின் மேன்மையை எடுத்துக் கூறிக் குந்தியை ஆசீர்வதித்து, அரண்மனையை விட்டுச் சென்றார் மகரிஷி.

ஓர் நாள் இரவு, குந்திதேவிக்கு ஓர் எண்ணம் தோன்றலாயிற்று. முனிவர் பெருமான் தனக்கு உபதேசித்த மந்திரங்களின் வலிமையைப் பரீட்சித்துப் பார்க்க விரும்பிச் சூரிய பகவானுக்குரிய மந்திரத்தை உச்சாடனம் செய்தாள். உடனே அவள் முன் சூரிய பகவான் பிரசன்னமானார். தன்முன் தோன்றிய அழகும், ஒளியும் மிக்க கதிரவனின் தோற்றத்தைக் கண்டு திகைப்புற்றாள் குந்திதேவி. ஒருவாறு தெளிந்தவளாய்க் கதிரோனை நோக்கி "சுவாமி என்முன் தோன்றியுள்ள தாங்கள் யார்? ஏன் இவ்விடம் எழுந்தருளி உள்ளீர்கள்" என்று வினாவினாள். அப்போது பகலவன் "பெண்ணே! எனக்குரிய மந்திரத்தை நீ உச்சரித்தமையால் அகமகிழ்ந்து உன்முன் தோன்றியுள்ள சூரியதேவன் யான், மந்திரத்தை உச்சரித்தால் உனக்குச் சிறந்த புத்திர பாக்கியம் கிடைக்கும் என்று முனிவர் உனக்கு அருளியபடி, எனது அம்சம் பொருந்திய அழகும், ஒளியும் படைத்த சிறந்த புதல்வனைப் பெற்று இன்புறுவாயாக! அத்துடன் அவன் பிறக்கும் போது கவசகுண்டலங்களுடன் பிறப்பான் அவன் மிகவும் சிறந்தவனாகத் திகழ்வான்' என்று கூறிக் குந்தியை ஆசீர்வதித்து மறைந்தருளினார் சூரியபகவான்.

கதிரவன் கருணையால், அப்பொழுதே அந்த இரவில் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள் குந்திதேவி. பிறந்த குழந்தை அழகும், ஒளியும். கவசகுண்டலங்கள் அணிந்தும் இருக்கக் கண்டு ஆனந்தம் கொண்ட குந்திதேவி, அடுத்த கணமே கவலையின் வடிவானாள். கன்னிப் பெண்ணாகிய தான் ஓர் மகவைப் பெற்றெடுத்திருப்பதனை எவரேனும் அறிவாராகில், தன்னை இகழ்வார்கள், என்று எண்ணிச் சிந்தனை வயப்பட்டாள். சிறிது நேரம் சென்றது. உடனே அவளுக்குள் ஓர் முடிவுக்கு வந்தவளாய், ஒரு பேழையை எடுத்து, அப்பேழைக்குள் குழந்தையை வைத்து, பொன், மணிகள், இரத்தினம் என்பவற்றால் நிரப்பி பட்டாடை ஒன்றையும், அதற்குள் வைத்து மூடி, ஆற்றங்கரைக்கு எடுத்துச் சென்று தெய்வத்தைப் பிரார்த்தனை செய்து அப்பேழையை ஆற்றில் விட்டாள்.

தேரோட்டியாகிய ரதையன் என்பான், ஆற்றில் ஓர் மரப் பேழை மிதந்து வருவதைக் கண்ணுற்று, அப்பேழையை எடுத்துத் திறந்து பார்த்தான் என்னே அதிசயம்! அதன் உள்ளே அழகியதோர் ஆண்மகவும், பொன் மணி இரத்தினம் என்பனவும் இருக்கக் கண்டு அதிசயமுற்றவனாய், அப்பேழையைத் தனதில்லத்துக்கு எடுத்துச் சென்றான். குழந்தைச் செல்வம் இல்லாத ரதையன் ராதை தம்பதியர் குழந்தையை வளர்த்து வரலானர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைக்குப் பெயர் சூட்ட விழைந்த வேளை, விண்ணின்று ஓர் அசரீரி ஒலிக்கலாயிற்று. காதிலே குண்டலங்களை அணிந்தபடி பிறந்தமையால் இவனுக்குக் "கர்ணன்" எனப்பெயர் சூட்டுக என்று வானொலி ஒலித்ததற்கமைய அக்குழந்தைக்குக் "கர்ணன்" என்று பெயர் சூட்டலாயினர். கர்ணன் சீரும் சிறப்புடனும் வளர்ந்து வரலானான். ராதையன் அவனுக்குச் சகல கலைகளையும் கற்பித்து வரலானான். கர்ணன் சிறந்த வீரனாக வளர்க்கப்பட்டு வந்தான். கர்ணன், வில், வாள், யானை ஏற்றம், குதிரை ஏற்றம் போன்ற படைக்கலப் பயிற்சிகளில் மேம்பட்டு விளங்கினான். ஆனாலும் சிறந்ததொரு முனிவரிடம் பயிற்சி பெற்று உயர்வடைய விரும்பினான். அக்காலத்தில் பரசுராமர் வித்தைகள் கற்பித்தலில் சிறந்த ஆசானாக விளங்கிவந்தார். ஆனால் அவர் அரசகுலத்தவர் மேல் அளவு கடந்த வெறுப்பு உற்றவராய் இருந்ததனால் அவர் எந்தவொரு அரசர்கட்கும் ஆசானாக விளங்காமல் இருந்துவந்தார். இக் கருத்து நிலைப்பாட்டினை அறிந்திருந்த கர்ணன், அவர்பால் சென்று தான் ஓர் பிராமண குலத்தவன் என்பதாக எடுத்துரைத்துப், பரசுராமரிடம் மாணவனாக இருந்து வரலானான்.

முனிவரும், கர்ணனின் அடக்கம், கீழ்ப்படிவு என்பவற்றைக் கண்டு நம்பி, அவனை ஓர் பிராமண குலத்தவன் என்றே கருதி, அவனுக்கு வித்தை கற்பித்து வந்தார். கர்ணன் மிகவும் பயபக்தியுடன் முனிவருக்குப் பணிவிடைகள் புரிந்து, கல்வி கற்று வந்தான். நாட்கள் சென்றன. ஓர் நாள் பரசுராமர் கர்ணனின் தொடையில் தலை வைத்து நித்திரை செய்தார். அந்தோ! கொடியவிதி தன் நாடகத்தை நடத்தும் அந்தக் கணமும் வந்தது. பயங்கரமான இரத்தவாசி என்னும் வண்டு ஒன்று, கர்ணனின் தொடையைத் துளைக்கலாயிற்று. இதனைக் கண்ணுற்ற கர்ணன் மிகத் துன்பமடைந்தான். வண்டு தொடையைத் துளைத்து தொடையில் இருந்து இரத்தம் பெருகியது. தொடையை அசைத்தால் குருதேவரின் உறக்கம் கலைந்துவிடுமே என்று சிந்தித்துப், பெருகும் இரத்தத்தினையும் பொருட்படுத்தாமல் பொறுமையாயிருந்தான் கர்ணன். பெருகிய இரத்தம் குருதேவரின் ஆடையை நனைத்தது. ஈரத்தன்மையை உணர்ந்து கொண்ட குருதேவர், கண்விழித்தெழுந்தார். கர்ணனின் தொடையை வண்டு துளைத்து அதிலிருந்து பெருகிய இரத்தம் தன் ஆடையை நனைத்ததனைக் கண்டு சீற்றம் கொண்டார். "ஏ கர்ணா, இந்த இரத்தத்தினைக் கண்டு பயப்படாமல் பொறுமையுடன் இருக்கும் நீ யார்? ஓர் பிராமணனாயின் இரத்தத்தைக் கண்டு பயப்படாமல், நெஞ்சம் நடுங்காமல் இருந்திருப்பாயா? பிராமணர்களால் அப்படி இருக்க முடியாது. எனவே நீ ஓர் அரசகுலத்தவனாக இருக்க வேண்டும். அரசகுலத்தவர்க்குத்தான் அத்தகைய பொறுமை இருக்கும். எனவே கர்ணா நீ மறைக்காமல் உண்மையைக் கூறு," என்று கட்டளை இட்டார். இவ்வளவு காலம் செய்யப்பட்ட கர்ணன்தன் திறமை வெளிவந்து விட்டது என்று அஞ்சி, ஒன்றும் பேசாது, மௌனமாகத் தலை குனிந்திருந்தான். மிக்க கோபம் கொண்டிருந்த பரசுராமர், கர்ணன் தன்னை ஏமாற்றி வில்வித்தையைக் கற்றுக் கொண்டானே என்று ஆவேசமுற்றவராய், "ஏ கர்ணா! தக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தில் என்னிடம் கற்ற வில்வித்தை உனக்குப் பயன்தராது போகக் கடவது'' என்று சாபமிட்டார். அச்சாபத்தைச் செவி மடுத்த கர்ணன் மிக மனத்துயருற்றவனாய்த் தன் இல்லம் ஏகி வாழ்ந்து வரலானான்.

## குந்திதேவி திருமணம் :

குந்திதேவி திருமண வயதை அடைந்துவிட்டாள் என்பதனை உணர்ந்த குந்திபோஜன் தனது மகளின் திருமணத்தைச் சுயம்வரம் மூலம், நடத்த முற்பட்டான். பல்வேறு நாட்டு மன்னர்கட்கும் இச்செய்தியை அறிவித்தான். நல்லதோர் நாளில் சுயம்வரம் நடக்க ஏற்பாடுகள் நடக்கலாயிற்று. பல்வேறு தேசத்து மன்னர்களும் சுயம்வரத்துக்கு வந்து சேர்ந்தனர். குந்தியின் சுயம்வரத்தை அறிந்த பீஷ்மர், அச் சுயம்வரத்துக்குப் பாண்டு மன்னனை அனுப்பி வைத்தார்.

மண்டபத்தில் நிறைந்திருந்த மன்னர்கள் பலரையும் பார்த்து அறிந்த குந்திதேவி, பாண்டு மன்னனின் கழுத்தில் தன் கரத்தில் இருந்த மலர்மாலையை அணிவித்தாள். மகளின் மனக்கருத்தை உணர்ந்து கொண்ட மன்னன், பாண்டுமன்னனுக்கும், குந்திதேவிக்கும் வேதவிதிப்படி அதிசிறப்பாகத் திருமணம் செய்து வைத்தான், பொன், மணி, வஸ்திரம், போன்ற நிறைந்த சீர்வரிசைகள் கொடுத்துப் பாண்டுமன்னனுடன், குந்தி தேவியை அஸ்தினாபுரத்துக்கு அனுப்பிவைத்தான்.

கர்ணன் கல்வி முயற்சியைப் பரசுராமரிடம் பெற விழைந்த நிகழ்வுத் தொடர் மூலம், அரியதோர் கருத்தொன்றை நாம் உளம்கொள்ள வேண்டும். ''பொய் சொல்லுதல்'' என்பது பஞ்சமா பாதகங்களுள் ஒன்றாக வைத்தனர் ஆன்றோர். ''பொய் உரைத்தல்'' எவ்வளவு இழிவான செயல் என்பதனை நாம் உளம் கொள்ளும் வகையில் கர்ணனின் வரலாறு அமைந்துள்ளது. அரிய பெரும் வில்வித்தையில் மேநிலை அடைந்த போதும் அவனால் பாரதப் போரில் வெற்றி பெறமுடியாத நிலைக்கு முனிவரின் சாபத்தால் தள்ளப்பட்டு விடுகின்றான். குருதேவரிடமே பொய் உரை பகர்ந்து வித்தையைப் பெறவிழைந்து, எத்தனை அனர்த்தத்தைக் கர்ணனின் வாழ்வில் சேர்த்தது. பொய் உரைத்தலே பாவகாரியம். அதிலும் கற்பிக்கும் ஆசானிடம் பொய் சொல்லுதல் எத்தனை பாவமான செயல். இச்சம்பவத் தொடர்மூலம், பொய் உரைத்தலின் பாவத்தைப் பரிபூரணமாக உணர்ந்து, அதனை எம்வாழ்வில் கடைப்பிடித்தொழுகுவோமாக.

தொடரும் .....

சிவானந்தவாரிதி
சிவத்திரு வ. குமாரசாமிஐயர்
நூலகர்,
வலிவடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.
(மல்லாகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் - ஒரு மதிப்பீடு

மனிதன் - அப்படிங்கறவன் யார்? இப்படி ஒரு கேள்வியை உங்களைப் பார்த்து யாராவது கேட்டால் என்ன பதில் சொல்லுவீங்க?

''மனுஷன் என்கிறவன் மனுஷன் அவ்வளவுதான்!'' இப்படித்தான் சொல்ல முடியும்.

இருந்தாலும் ''மனிதன்'' அப்படிங்கறதுக்கு ஒரு விளக்கம் தேவை. ஒரு Definition தேவை. அதாவது ஒரு வரைவிலக்கணம் தேவை!

இதைப்பற்றி கிரேக்கர்கள் யோசிக்க ஆரம்பிச்சாங்களாம் ஏனென்றால் அவங்கதான் இதுமாதிரி வரைவிலக்கணம் வகுக்கறதுலே கெட்டிக்காரங்களாம். உலகத்திலே எத்தனையோ பொருள்களுக்கு வரைவிலக்கணம் வகுத்தாச்சு. மனிதன் என்கிறவனுக்கு இன்னமும் நாம அதை செய்யலையே... அப்படிங்கறது அவங்க கவலை.

இதுக்காகவே கிரேக்க அறிஞர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி ஒரு இடத்திலே உட்கார்ந்து யோசனை பண்ணியிருக்காங்க. ஒவ்வொருத்தரா அவங்கவங்களுக்கு தெரிஞ்ச விளக்கத்தைக் கொடுக்க ஆரம்பிச்சு இருக்காங்க.

ஒருவர் எழுந்திருச்சாராம் ''மனுஷன் என்கிறவன் ஒரு இரண்டு கால் பிராணி!'' அப்படி சொல்லிவிட்டு உட்கார்ந்தார். மற்றவங்க எல்லாம் யோசிச்சுப் பார்த்தாங்க இவர் சொல்லுகின்ற விளக்கம் சரியாத்தானே இருக்கு என்று நினைச்சாங்க. சரி இதையே ஏற்றுக் கொள்வோம் என்று எல்லோரும் ஒரு முடிவுக்கு வருகிற சமயத்திலே ஒரு ஆள் எழும்பினார். அவசரப்படாதீங்க... கொஞ்சம் பொறுங்க என்றார். எங்கேயோ வெளியிலே போனார். கொஞ்ச நேரத்திலே என்னத்தையோ ஒரு துணியாலே மூடி கையிலே எடுத்துக் கொண்டு வந்தார். என்னங்க அது? என்று கேட்டாங்க? ''நீங்க சொல்ற மனுஷன் இதுக்குள்ளே இருக்கிறான்!'' என்றார்! எல்லோருக்கும் ஆச்சரியம்! துணியை எடுத்துவிட்டுப் பார்த்தா உள்ளே ஒரு கோழி!

''நீங்க சொல்கிற இலக்கணப்படி பார்த்தா இதுவும் ஒரு இரண்டு கால் பிராணிதானே.'' என்றார். எல்லோர் முகமும் ஒருமாதிரியாய் ஆயிட்டுது. மனித இலக்கணம் வகுத்தவர் மறுபடியும் எழுந்தார்.

''என்னுடைய வரைவிலக்கணத்திலே குறை இருக்கிறதை ஒத்துக் கொள்கிறேன். அதை இப்போது சரிபண்றேன்!'' என்று சொல்லி மறுபடியும் சொன்னார்.

''மனுஷன் என்கிறவன் இறகுகள் அற்ற ஒரு இரண்டுகால் பிராணி'' அப்படி என்றார். உடனே எல்லோரும் சரியாய்ப் போச்சு, ஏனென்றால் இது கோழியையும் விலக்கிட்டுது என்றாங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆள் மறுபடியும் எழுந்தார். ''கொஞ்சம் பொறுங்க இதோ வந்துடறேன்'' என்று சொல்லிவிட்டு வெளியே ஓடினார். மறுபடியும் கையிலே என்னத்தையோ துணியாலே மூடிக் கொண்டு வந்தார்.

இப்ப என்ன வச்சிருக்கீங்க கையிலே? என்று கேட்டாங்க.

''நீங்க சொல்ற மனுஷன்தான் இப்பவும் உள்ளே இருக்கான்!'' அப்படின்னு சொல்லிவிட்டு துணியை எடுத்துக் காட்டினார்.

பார்த்தால்... அதே கோழி! சிறகுகளையெல்லாம் எடுத்துக் கொண்டு வந்திருந்தார். ''இதுதாங்க ... இறகுகள் அற்ற இரண்டுகால் பிராணி உங்க விளக்கப்படி மனுஷன்!'' என்றார். அறிஞர்கள் பார்த்தாங்க... ''சபை இத்தோடு கலையும்! என்று சொல்லி எல்லோரும் எழுந்திட்டாங்க.

அதுமட்டும் இல்லே — ''மனிதனுக்கு வரைவிலக்கணம் காணமுடியாது!'' அப்படி என்று ஏகமனதாக முடிவு எடுத்தார்களாம்.

"அப்படி முடிவு எடுத்தது மூலமாய் கிரேக்கர்கள் தம்மை அறிஞர்கள் அப்படின்னு மறுபடியும் நிரூபித்துக் கொண்டார்கள்!'' என்று எழுதியிருக்கிற ஓர் தமிழ் அறிஞர் கவிக்கோ அப்துல் ரகுமான்.

உண்மைதான்... .....

மனுஷனை எந்த வரைவிலக்கணத்துக்குள்ளேயும் அடக்க முடியாது. எந்த அளவுகோலாலும் அளக்க முடியாது. அதுதான் மனுஷனுக்கு இருக்கிற பெருமை.

பெரியார் என்ன சொல்கிறார் தெரியுமா?

பணத்தாலே ஒரு மனுஷனை மதிக்கிறது என்றால் ரிசர்வ் பாங்கைத்தான் மதிக்கணும்.

படிப்பாலே ஒரு மனுஷனை மதிக்கிறதுன்னா
பெரிய லைப்ரரியைத்தான் மதிக்கணும்!
அறிவாலே ஒரு மனுஷனை மதிக்கறதுன்னா
கலைக்களஞ்சியம் இருக்கே என்சைக்ளோபீடியா ......
அதைத்தான் மதிக்கணும்!

அதனாலே எப்போ மனுஷனுக்கு மதிப்பு என்றால் அவன் மனிதத் தன்மை உள்ளவரை நடந்துக்கறப் போதுதான்!

மனித நேயம் இல்லாத வாழ்க்கை மனித வாழ்க்கையே அல்ல என்பதைப் புரிஞ்சிக்கணும்! அப்படிங்கறதுக்காகத்தான் இந்தத்தகவல்.

தென்கச்சி சுவாமிநாதனின் ''இன்று ஒரு தகவல்''
கேட்டு எழுதியவர் — மயிலை திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியானின் அருட்கடாட்சம்

செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள், கடையிற் சுவாமிகள் போன்றோர் தாம் வாழ்ந்த காலத்தில் மக்களது அறியாமையைப் போக்கி மெஞ்ஞானத்தைப் போதித்தது மட்டுமன்றி அவர்களுடைய பல்வேறு துன்பங்களையும் போக்கிவந்துள்ளனர். அதுமட்டுமன்றி பல தொழில் முயற்சியாளர்களும் வியாபாரிகளும் அவர்களது அருட்கடாட்சத்தைப் பெற்றதனால் தங்கள் தொழில்களில் சிறந்து விளங்கி உயர்நிலையை அடைந்தனர் என்பதையும் அறிகின்றோம். கடையிற் சுவாமிகள் நடமாடித் திரியும்பொழுது களைப்பாறுவதற்கோ அல்லது தண்ணீர் அருந்துவதற்கென்றோ எதிர்பாராத விதமாக அங்கேயுள்ள வியாபார ஸ்தாபனங்களில் ஏதாவதொன்றுக்குள் எதிர்பாராது செல்வதுண்டு. அவ்வாறு சுவாமிகள் சென்றால் அந்த வியாபார உரிமையாளருக்கு நல்லகாலம் பிறந்துவிட்டதாக அர்த்தம். ஏனென்றால் சுவாமிகள் சென்று அந்த ஸ்தாபனத்தின் வியாபாரம் பெருகி குறுகிய காலத்தில் அவர்கள் பொருளாதார ரீதியில் உயர்வான நிலைக்கு வந்து விடுவார்கள். சந்நிதி முருகன்மேல் ஆழமான பக்திகொண்ட அன்பர் ஒருவருக்கு எமது காலத்திலும் இதுபோல நடைபெற்ற ஒரு சம்பவத்தைப் பின்வரும் நிகழ்ச்சி எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு இராணுவ முகாமைக் காப்பாற்ற வெற்றிலைக்கேணி இராணுவம் கடல்வழியாக இறங்கியபொழுது அமைதியாக இருந்த அந்தக் கடற்கரையோரக் கிராமத்திலிருந்த அனைத்து மக்களும் ஆனி மாதம் 12ஆம், 13ஆம் திகதிகளில் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்பொழுது தமது சொத்துக்களை மட்டுமல்லாது சொந்தங்களையும் இழந்து இடம்பெயர வேண்டிய நிலையும் பலருக்கு ஏற்பட்டது. அவ்வாறான இழப்புக்களுடன் வெற்றிலைக்கேணிக் கிராமத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்தான் திரு. வே. இரத்தினசிங்கம் அவர்கள். அவர் பல இலட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்களை மட்டுமல்ல தனது தந்தையையும் அங்கே பறிகொடுத்துவிட்டு இடம்பெயர்ந்து வரவேண்டிய நிலை ஏற்பட்டது. பருத்தித்துறைக்கு இடம்பெயர்ந்து வந்த திரு. இரத்தினசிங்கம் அவர்கள் ஒரு மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகக் கடையில் உதவியாளராக வேலை செய்து தனது சீவியத்தை நடாத்தி வந்தார். சிறிது காலத்தின் பின் சொந்தமாக ஒரு உதிரிப்பாகக் கடையை உருவாக்கி, உண்மை, நேர்மை, நாணயம் தவறாமை போன்ற பண்புகளுடன் தனது வியாபாரத்தை நடாத்திவந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் சந்நிதி முருகனுக்கு கிடைக்கச் செய்வதற்காக அரிசி மூடை ஒன்றை யாழ்ப்பாணம் 38, 40 ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கே. வைத்தியலிங்கம் சகநிறுவனத்தினர் திரு. வே. இரத்தினசிங்கத்திடம் கையளித்தனர். திரு. இரத்தினசிங்கம் அவர்கள் இந்த அரிசி மூடையை வாகனத்தில் ஏற்றி வரும்பொழுது அது வழியில் தவறிவிழுந்துவிட்டது. ஆனாலும் திரு. இரத்தினசிங்கம் பெரும் சிரமப்பட்டு பல மைல்கள் திரும்பிச்சென்று ஒருவாறு அந்த அரிசி மூடையை மீட்டுவந்து உரியவர்கள் மூலம் சந்நிதி முருகனுக்குக் கிடைக்கச் செய்தார். இவ்வாறு அரிசி மூடை தவறியமை அதனால் திரு. இரத்தினசிங்கம் அவர்கள் பட்ட துன்பம், அதனைத் திரும்பவும் பெறுவதற்கு அவர்பட்ட கஷ்டம் இவற்றை எல்லாம் அறிந்த முருகேசுசுவாமிகளின் அருட்பார்வை திரு. இரத்தினசிங்கம் பக்கம் திரும்பியது. திரு. இரத்தினசிங்கத்துடன் எந்த விதமான தொடர்புகளும் இல்லாத முருகேசு சுவாமிகள் திடீரென ஒருநாள் அவருடைய வியாபார ஸ்தாபனத்திற்கு வருகை தந்தார்கள். சுவாமிகளைக் கண்ட திரு. இரத்தினசிங்கத்தின் உடல் மெய்சிலிர்த்தது. உள்ளத்தில் அளவிட முடியாத ஆனந்தம் பொங்க எழுந்து சென்று சுவாமிகளை வணங்கி அவரை அழைத்துவந்து ஆசனத்தில் அமரச்செய்தார்கள்.

சுவாமிகள் தனது வழமையான புன்சிரிப்புடன் என்னப்பா வியாபாரம் நல்லா நடக்கின்றதா என குசாலம் விசாரித்து அவருடன் சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அதன்பின் திரு. வே. இரத்தினசிங்கத்தின் மேசை இலாட்சியைத் திறந்து தனது கைக்குள் வைத்திருந்த ஒரு சிறு தொகைப்பணம், சந்நிதியானின் அருள் விருட்சமான பூவரச மரத்தின் இலை மற்றும் சந்நிதியானுடைய திருநீறு என்பவற்றை அதற்குள் போட்டு மீண்டும் அதனைப் பூட்டிவிட்டு சந்நிதியானுடைய அருட்கடாட்சம் உனக்கு என்றும் கிடைக்கும் என்றுகூறி திரு. இரத்தினசிங்கத்தையும் அவரது மகனையும் ஆசிர்வதித்துவிட்டு புன்சிரிப்புடன் கடையைவிட்டு அகன்றார்கள்.

என்ன ஆச்சரியம் அன்றிலிருந்து அவர்களது வியாபார ஸ்தாபனத்தில் விற்பனை அதிகரிக்கத் தொடங்கியது. பல புதிய தொழில் அதிபர்களது நட்புகள் கிடைத்தன. வியாபார முயற்சியில் ஈடுபடும் பொழுது சாதாரணமாக ஏற்படும் தடைகளும் பிரச்சினைகளும் தானாக மறையத் தொடங்கியது. பல இலட்சம் ரூபா பொருட்களை எந்தவித பொறுப்புமில்லாமலே நம்பி இவருக்கு வழங்குவதற்கு இவருடைய வியாபாரிகள் முன்வந்தனர் இதனால் குறுகிய காலத்திலேயே தனது வியாபாரத்தில் உயர்நிலையை அடையும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது: இன்று பல உள்ளூர் வியாபாரிகள் இவரிடமிருந்து பொருட்களை மொத்தமாக கொள்வனவு செய்யும் அளவுக்கு உயர் நிலையை அடைந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பொழுது 'சிவசக்தி மோட்டேர்ஸ்' என்ற பெயருடன் பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து மந்திகை நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் திரு. வே. இரத்தினசிங்கத்தின் மோட்டார் பாகங்களின் உதிரிப்பாக விற்பனை ஸ்தாபனம் உள்ளது. வியாபார நடவடிக்கையில் மட்டுமல்லாது பிரயாணம் செய்கின்ற சந்தர்ப்பங்களில் கூட மலை போல பல பிரச்சனைகளை எதிர் நோக்க வேண்டியுள்ளதென்றும், ஆனாலும் முருகேசு சுவாமிகளின் அறிவுரைகளாலும், சந்நிதி முருகனுடைய அருளாலும் அந்தப் பிரச்சனைகளிலிருந்தும் ஆபத்துக்களிலிருந்தும் தன்னை எவ்வாறு விடுபட முடிந்தது என்பதனையும் திரு. இரத்தினசிங்கம் அவர்கள் என்னிடம் எடுத்துக் கூறினார்கள், தனது வாழ்க்கையில் மட்டுமன்றி வியாபாரத்திலும் நேர்மையைக் கடைப்பிடிக்கின்ற திரு. இரத்தினசிங்கத்திற்கு சந்நிதி முருகனின் அருட்கடாட்சம் கிடைத்திருப்பது பொருத்தமானதே. இவ்வாறான பண்புள்ள வியாபாரிகளுக்கு கிடைக்கின்ற அருட்கடாட்சம் ஆத்மீக ரீதியாக மட்டுமன்றி சமூகக் கண்ணோட்டத்திலும் மிக்க தேவையானதொன்றே.

சந்நிதி முருகன் கலியுகக் கந்தன் அல்லவா !

ந. அரியரத்தினம்
தொண்டைமானாறு

குறிப்பு :- சந்நிதி முருகப் பெருமானுடைய இவ்விதமான அற்புத நிகழ்வுகள் தொடர்ச்சியாக ஒவ்வொரு மலரிலும் வெளிவரவுள்ளது. இவ்வாறான அற்புத நிகழ்வுகளை அனுபவித்த அன்பர்கள் தகுந்த ஆதாரத்துடன் விளக்கமாக குறிப்பிட்டு மலர்க் குழுவிற்கு அனுப்பினால் அவற்றையும் இத்தொடரில் இடம் பெறச்செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய பகவானிடமிருந்து சக்தி பெறுவோம்

பௌதிக கலாச்சாரத்தில் சூரியன் மகாகொதி நிலையிலுள்ள வாயுக்கள் நிரம்பிய ஒரு கோளம். வாயுக்கள் சிதறிப் பரவுவதே அவற்றின் இயற்கை. மூடிய ஒரு பாத்திரத்தில்தான் வாயுவைப் பரவாமல் இருத்தி வைக்க முடியும். ஆனால், சூரியனிலோ வாயுக்கள் ஒன்று திரண்டிருப்பது நம் பாக்கியம். அதிஉஷ்ணமான இந்த வாயுக்கோளம் நமக்கு உணவும் உயிரும் தருவதற்காகத் தினமும் உதயமாகிறது. பௌதிகத்தின் ஆராய்ச்சிப் பொருளான இதே சூரியன், வேத சாஸ்திரங்களிலும் முக்கியமான இடம் கொள்கிறான். தியானத்துக்கும் சேவைக்கும் உருவமான பூணூல் தரிக்கும்போது இந்து ஒவ்வொருவனும் உபதேசம் பெறும் காயத்ரி மந்திரத்தின் விஷயம் சூரிய பகவான். 'தியானத்துக்குரிய சூரிய பகவானுடைய ஒளி என் உள்ளத்தில் புகுந்து என் சிந்தனைகளைத் தூண்டி விடுவதாக' என்பதே காயத்ரி ஜபத்தில் அடங்கிய பிரார்த்தனை. தியானம் செய்து துதிப்பதற்காக இப்பிரார்த்தனையை நமது முன்னோர்களுக்கு விசுவாமித்திர மகரிஷி வழங்கினார்.

உயிரற்ற கொதி வாயுக் கோளமே சூரியன் என்பது தற்கால பௌதிகம் சொல்கிற பாடம். ஆனால் தியான அனுபவம் வாய்ந்த நமது முன்னோர்களோ, சூரிய ஜோதிக்குப் பின் ஒரு தெய்வம் இருப்பதாக உறுதியாகக் கருதினர். நம்முடைய உலகத்தை சிருஷ்டித்து உயிர்களை ஜீவனுடன் இயக்கி வரும் சூரியன், காட்சிக்கு எட்டாத பரம்பொருள் நம் கண்ணுக்குத் தெரியும் வண்ணம் கொண்ட பிரத்தியட்ச வடிவம் என்றார்கள். சூரியன் என்பது நம் கண்ணுக்குக் கோசரமாகும் பிரம்மம். எந்த அரசியல்வாதியாயினும் சரி, மாணாக்கனாயினும் சரி, அவர்கள் வேறெந்தச் செயல்களில் ஈடுபட்டிருந்தாலும் தினந்தோறும் காலையும், மாலையும் சூரியன் நமக்குத் தரும் சாந்தமான காட்சியை அனுபவித்துத் தனக்குள்ளேயே மௌனமாக விசுவாமித்திரர் தந்த மகா மந்திரத்தை மனனம் செய்வதால் பகுத்தறிவை இழந்துவிட மாட்டார்கள். மந்திரத்தின் உட்பொருளில் ஆழ்ந்து ஜபிக்க வேண்டும். சூரியன் ஒரு தேவன்; முனிவர்கள் எந்தப் பரம்பொருளின் உட்கலப்பதற்காகத் தவமிருந்தனரோ அந்தப் பரம்பொருளின் பிரதிநிதியே சூரியன் என்பது நம் முன்னோர் துணிபு. கொடிய விலங்குகள்போல் நம்மை விழுங்கக் காத்திருக்கும் பாபங்களினின்று காயத்ரி பிரார்த்தனை நம்மைக் காப்பாற்றும். இந்த உலகமும், உயிர் வாழ்க்கை அனைத்தும் சூரியனைச் சார்ந்தவையே. சூரியனில் உள்ள ஆண்டவன் நம் மனத்தில் பிரவேசித்து நம்மைத் தீமையிலிருந்து காப்பானாக!

- ராஜாஜி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாவல் இலக்கியம்

(தொடர்ச்சி ...

## 03. உளவியல் :

எஸ். தோதாத்ரி என்பவர் 'ஜெயகாந்தன் - ஒரு விமர்சனம்' என்ற நூலில் ''குழந்தைப் பிராயத்தில் ஏற்படும் மனப்பதிவுகள், ஒரு ஆணுக்கு தாய் மீது ஏற்படும் பாலீர்ப்பு, ஆண்மை இழந்தமையால் ஏற்படும் மனப் பிறழ்ச்சி, தாழ்வுச்சிக்கல் முதலிய கருத்தோட்டங்கள் அண்மைக் கால நாவலில் பிரதிபலித்தன'' என்று குறிப்பிடுகின்றார். ஜெயகாந்தனின் கங்கா, ஞானவி ஆடலரசன் முதலிய பாத்திரங்களும் இந்திரா பார்த்தசாரதியின் ''திரைகளுக்கு அப்பால்'' என்ற நாவலும் இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

## 04. அரசியல் ஆதிக்கம் :

தமிழ் நாட்டில் பல நாவல்கள் சாத்தியம் மறைந்து மதிப்பிழந்து நிற்கும் அவலத்தை பொருளாகக் கொண்டு பல நாவல் எழுதப்பட்டன. நா. பார்த்தசாரதியின் ஆத்மாவின் இராகங்கள், ராஜம் கிருஷ்ணனின் பேராசை இதழ்கள், இந்திரா பார்த்தசாரதியின் குருதிப்புனல் என்பன குறிப்பிடத்தக்கவை.

இலங்கையில் ஒடுக்கப்பட்ட மக்களின் பல்வேறு எழுச்சிகளையும் இயக்கங்களையும் பொருளாகவும் பின்னணி ஆகவும் கொண்டு செ. கணேசலிங்கன், பெனடிக்ற்பாலன், டானியல், தெணியான் போன்றோர் எழுதி வருகின்றனர்.

## 05. நவீனத்துவமும் நகர வாழ்க்கையும் :

தனி மனித வாதத் தார்மீகப் பிரச்சினை பாலுறவுப் பிரச்சினை உளவியல் அக்கறை என்பன நகர வாழ்க்கையில் உயர்மட்ட மக்களிடையே தான் காணப்படுகின்றன. ஜெயகாந்தன், நா. பார்த்தசாரதி, இந்திரா பார்த்தசாரதி, அகிலன் முதலியோருடைய நாவல்களில் நகர வாழ்வில் உயர் மட்ட வாழ்க்கை வாழும் தொழிலதிபர்கள், அரசியல் தலைவர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள், வக்கீல்கள், டாக்டர்கள், விபச்சாரிகள் பாத்திரங்களாக படைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நாவலிலக்கிய வளர்ச்சி அண்மைக் காலங்களில் உள்நாட்டு யுத்தம் காரணமாகத் தடைப்பட்டு இருந்தாலும் மூன்று வகையிலான போக்குகள் அவதானிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01) யாழ்ப்பாணத்தை மையப் படுத்தி வடக்கு, கிழக்கு, மலையகம் என்ற தமிழ் தேசிய உணர்வுடன் படைக்கப்படும் ஒரு வகை யான நாவல்கள்.

02) தெற்கே அதைப் பகிரங்கப்படுத்த முடியாத நிலையில் புலம்பெயர்ந்த தமிழர் பிரச்சினை பற்றிய இலக்கியப் போக்கு இன்னொரு வகை யாகவும்

03) மலையக தேசிய இனச் சார்பை புலப்படுத்தும் இலக்கியப் போக்கு இன்னொரு வகையாகவும் பிரதிபலிக்கப்படுகிறது.

இலக்கிய உத்திகளிலும் அண்மைக் காலத்து நாவல்கள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன. களம் வர்க்கம், காலம், சமூகத்தளம் என்பனவற்றில் காணக்கூடிய மாற்றங்கள் போல மனநினைவு, ஓட்டம் என்ற நடை உத்தியை பல நாவலாசிரியர்கள் கையாளுகின்றனர். இராஜம்கிருஷ்ணன், நீலபத்மநாபன் முதலியோரது நாவல்களில் இப் பண்பினைக் காணலாம், இன்னொரு வகையில் நறுக்கென்று வெட்டியது போன்ற புத்தி சாதுரியமான உரையாடல்களையும் ஜானகிராமன், இந்திரா பார்த்தசாரதியின் நாவல்கள் இவ்வகையிலானவை. ஆகவே நாவல்கள் இக் குறிப்பிட்ட நூற்றியிருபது வருடங்களுக்குள் பல்வேறு வகையிலான வளர்ச்சிப் போக்குகளைக் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திரு. கி. நடராசா

(அதிபர்- யா/ உடுப்பிட்டி அ. மி. கல்லூரி)

### தோல்வி

தோல்வி குறித்து மனமே, நீ துயரமடையாதே தோல்வியினின்று நீ கற்றுக்கொள்ள வேண்டிய தனிப்பாடம் ஒன்றுண்டு. தோல்வி யினின்று நீபெறுகிற ஞானத்தையும் நல்லறிவையும் வேறுயாருமே உனக்கு வழங்க முடியாது. தோல்வியை நீ துருவியாராய்ந்தால் உன்னுடைய வீழ்ச்சியை நீ விசாரித்து பார்த்தால் மெய்யறிவு என்னும் பொக்கிசத்தை அதனால் நீ காண்பாய். இப்பொழுது தோல்வியாகத் தென்படுவது நாளை வரும் வெற்றிற்கு வித் தாகும்.

—சுவாமி சித்பனாநந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான விளக்கம்

விண்வெளிக்குச் செல்பவர்கள் தம்முடன் ஒட்சிசனையும் ஏன் எடுத்துச் செல்கின்றனர்?

- மேலே உயரச் செல்லும் பொழுது வளிமண்டல அமுக்கம் குறைகிறது.
- இதனால் சுவாசிப்பது கஷ்டமாதலால் அங்கு கிடைக்கக்கூடிய ஒட்சிசனின் அளவு குறைதல்.
- எனவே உயரமுக்கத்தில் உள்ள ஒட்சிசனை எடுத்துச் செல்வர்.

மழை நேரங்களில் சைக்கிள் டைனமோவுடன் பொருத்தப்பட்ட விளக்கின் குமிழின் பிரகாசம் ஏன் குறைகின்றது?

- மழை நீர் சைக்கிள் ரயரின் மீது டைனமோவுடனான உராய்வைக் குறைக்கும்.
- டைனமோவின் சுழற்சி குறைவடையும்.
- இதனால் மின்விளக்குக் குமிழின் பிரகாசம் மந்தமடையும்.

ஓடிக்கொண்டிருந்த பஸ்வண்டி திடீரென 'பிரேக்' போட்டு நிறுத்தப்பட்டதும் அதில் உள்ள பிரயாணிகளும் பொருட்களும் ஏன் முன் நோக்கி வீசப்படுகின்றனர்?

- ஓடிக்கொண்டிருக்கும் பஸ்ஸில் உள்ள பொருட்களும் மனிதரும் பஸ்ஸின் வேகத்திலேயே உள்ளனர்.
- பஸ் தடுப்பு பிரயோகிக்கப்பட்டதும் அதில் உள்ள பொருட்களும் மனிதரும் அதே வேகத்தில் செல்ல எத்தனிப்பர்.
- ஆனால் அவர்களால் அவ்வாறு செல்ல முடியாததால் முன் நோக்கி வீசப்படுவர்.

ஒரு ஆணின் குரலை விடப் பெண்ணின் குரல் ஏன் இனிமையாக இருக்கின்றது.

- பெண்ணின் குரல் உயர் அதிர்வெண்களையுடைய சுரங்களை உடையதாக இருப்பதால் இனிமையானது.

- அறிவியல் உண்மைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Easy way to Learn English

## PART - 10

### COMPREHENSION

1. ( **Read and translate into Tamil** )

One Day a poor traveller set off on a Journey. He sat under a tree to eat his midday meal. It consisted of rice and vegetables. Close to the tree, a woman had **put up** a stall to sell fried fish. She **looked on** while the traveller was eating his meal. When he had finished, she asked him for some money for the dried fish. The traveller protested that he had not come anywhere near the fish - stall. The woman insisted that he had enjoyed the meal because of the appelizing smell of fried fish. The woman and the traveller went before a Judge who looked into the matter.

The woman says the traveller enjoyed the meal because of the smell of fried fish. The traveller cannot deny that while eating his food, he got the smell of the fried fish. The Judge asked the woman and the traveller to go out of the court and stand into the sun light. The Judge then asked the traveller to hold out a coin and allow the woman to take the shadow cast by the coin. The traveller did the same and the woman left the place unknowingly.

| | | |
|---|---|---|
| set off | — | புறப்படுதல் |
| put up | — | கட்டுதல் — நிர்மாணித்தல் |
| looked on | — | அவதாணித்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. Match the words in A with their meanings in B

| A | B |
|---|---|
| To Transmit | To give support |
| To boast | To send out |
| To announce | To make known |
| To reduce | To respect |
| To honour | To praise oneself |
| To encourage | To respect |

3. Select the correct group of letters from each list within the brackets and complete each of the following

(1) P..................sical ( hy, hi, he, )

(2) T.................. hnical ( ac, ec, eh, )

(3) Rec..................ver (ei, ie, ee, )

(4) Artic.................. ( al, el, le, )

(5) Invent.................. ( ar, er, or, )

4. Fill in the blanks with the following words:-

Remained — Sprinkled — Cured — Shouted — Predicted Cured — Visited — Promised

(1) A clever Doctor ........................ the blind boy.

(2) Last week the students of Jaffna Hindu College .................. places of historical interest.

(3) Mohan borrowed some money from his friend and .................. to return it in two months' time.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) Scienlists have .......................... that man would go to Mars before the end of the twentieth Century.

(5) When Ranjith was attacked by a dog, he ............... for help.

(6) Maliny .................. some water on the fowers to make them fresh.

(7) Evenafter the smallpox patient was cured, the scars ...... ......

**5.** **Complete these with the correct word from the brackets.**

(a) This man is an honest conscientious worker, He will never .................... a bribe
( accept, eccept )

(b) The old man's writing is ... .............. ...
( eligible, illegible )

(c) He is sufiering from an incurable ..................
( disease, decease )

(d) The .................... immigrants were caught by the police, ( elicit, illieit )

(e) The boy didn't listen to his mother's ..............
( advise, advice )

S. Thurairajah
( English Tutor )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாத வாராந்த நிகழ்வுகள்

06 - 11 - 98 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை: திரு. க. கந்தசாமி (இளைப்பாறிய தபாலதிபர்)

**விடயம் : " பக்த மார்க்கண்டேயர் "**

(இசைச் சொற்பொழிவு)

வழங்குபவர் : திரு. க. ஆனந்தராசா (அன்னைதாசன்)

(ஆசிரியர், உரும்பிராய்)

பக்கவாத்திய சகிதம்

---

13 - 11 - 98 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 – 30 மணியளவில்

அறிமுகவுரை: திரு. செ. நடராசா (உப தபாலதிபர் வளலாய்)

**விடயம் : " இன்னிசை "**

வழங்குபவர் இசைமணி S. செல்லத்துரை

(இளைப்பாறிய இசை ஆசிரியர்)

வயலின் : பிரமஸ்ரீ ப. தியாகராஜசர்மா

மிருதங்கம்: வித்துவான் ச. ஹரிஹரன்

---

20 – 11 – 98 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திரு. சி. துரைராசா [இசைமணி] (கெருடாவில்)

**விடயம் : " புல்லாங்குழல் இசை "**

வழங்குபவர் : செல்வன் குணராசா நக்கீரன் (யாழ்ப்பாணம்)

வயலின் : வித்துவான் அ. ஜெயராமன்

மிருதங்கம்: வித்துவான் நி. மதிகுமார்

கடம் ; வித்துவான் M. கஜன்

மோர்சிங் : வித்துவான் க. நந்தகுமார்

---

27 - 11 – 98 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 – 30 மணியளவில்

# ஞானச்சுடர் - மாதவெளியீடு

# கார்த்திகை - 1998

வெளியீட்டுரை : திரு. செ. யோகச்சந்திரன்

(அதிபர் சிதம்பராக் கல்லூரி)

ஆய்வுரை: சிவஸ்ரீ. கை. நமசிவாயக்குருக்கள்

(பண்டிதர் சைவப்புலவர் கரணவாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் (ஜனவரி - ஒக்டோபர்) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அது பற்றிய முடிவுகள் 1999 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்கு பொருத்தமான, தரமான ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு சமய பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை,
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org